Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-30 | 15-09-2005 | வியாழக் கிழமை | ஓசை-210



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.

T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.-021-2225987

(சி-1276)

## தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் நினைவு நிகழ்வுகள் இன்று ஆரம்பம்


தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று காலை உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின்றன. முதல் ஒன்பது நாட்கள் தமிழர் தாயகத்தில் கிராமங்கள் தோறும் சிரமதானங்கள், கருத்தரங்குகள், போட்டிகள், கலை நிகழ்வுகளும் இறுதி மூன்று நாட்கள் அடையாள உண்ணாவிரதமும் நடைபெறவுள்ளன. முதல் நாளான இன்று காலை 9.55 மணிக்கு பொதுச் சுடரேற்றி தேசியக் கொடியேற்றப்படும்.

அடுத்து தியாகி லெப். கேணல் திலீபன் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மாலையிட்டு மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டு அகவணக்க நிகழ்வுகளும் இடம்பெறும். இதனையடுத்து நினைவுரைகள் நிகழ்த்தப்படும்.

அடுத்து வரும் நாட்களில் காலை 9.00 மணிக்கு பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், மலர் மலையிடல், மலர்தூவி வணக்கம் செலுத் தலையடுத்து அகவணக்கமும் நினைவுரைகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கென பொதுஇடங்கள், மண்டபங்கள், வீதிகள் என்பன துப்பரவு செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பொது நிறுவனங்கள், விடுதலைப்புலிகளின் துறைப் பிரிவுகள், பாசறைகள், முக்கிய பொது இடங்கள், (11ஆம் பக்கம் பார்க்க)



# வரலாறு காணாத பேரெழுச்சியுடன் முல்லையில் எழுச்சிப் பிரகடன மாநாடு!

## பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர்

(நமது செய்தியாளர்)

*வவுனியா தமிழ்தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முல்லை. மாவட்ட மக்களின் எழுச்சிப்பிரகடன மாநாடு நேற்று வெகுசிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றது. தமிழீழ தேசியத்தலைவரின் வண்ணப்படங்களையும், தமிழீழத்தின் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளையும் ஏந்தியவாறு பெருந்திரளான மக்கள் இந்தப் பிரகடன நிகழ்வில் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.*

புதுக்குடியிருப்பு 2ஆம் லெப்டினன்ட் மாலதி விளையாட்டுமைதானத்தில் இந்த நிகழ்வு வரலாறு காணாத பேரெழுச்சியுடன் நடைபெற்றது. முல்லை.மாவட்டத்தின் சகல பகுதிகளிலுமிருந்து மக்கள் அணி திரண்டு வந்து இங்கு எழுச்சி கொண்டனர்.

பிற்பகல் 4.30 இற்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை இந்திய ஆக்கிரமிப்புப்படையுடனான சமரில் வீரச்சாவடைந்த அன்றைய முல்லை. மாவட்ட தளபதி மேஜர் பசீலனின் தாயார் நல்லையா தங் (12ஆம் பக்கம் பார்க்க)



*மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்தமையடுத்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சிறிலங்காப்பொலிசார் மூவரையும் நேற்று போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினர் கிளிநொச்சியில் சந்தித்தனர். நண்பகல் பன்னிரண்டு மணியளவில் கிளிநொச்சியில் இச் சந்திப்பு இடம்பெற்றது.*

## அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கேணல் சொர்ணத்துடன் கலந்துரையாடல்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூர்,வெளியூர்,அரசசார்பற்ற நிறுவனங்களைச்சார்ந்த பிரதிநிதிகளை திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் நேற்று முன்தினம் சந்தித்துக்கலந்துரையாடினார். சேனையூர் மத்திய கல்லூரியில் முற்பகல் பத்து மணிக்குத் தொடங்கிய இச்சந்திப்பு பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசமே இனியும் கண்மூடி விடாது எங்களின் குரலுக்கு பதில் சொல்!

-முல்லை. மக்கள் எழுச்சிக்குரல்

தமிழ் மக்களுக்கு எதிரான போர்க் காலங்களிலும் சமாதான காலங்களிலும் சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைகளையும் அராஜகங்களையும் நயவஞ்சகங்களையும் சர்வதேசத்திற்கு சொல்ல வவுனியாவில் ஒரு பிரகடனத்தை அனைத்துலகப் பார்வைக்கு வைத்தோம். அந்தப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று முல்லை. மாவட்ட மக்களின் எழுச்சிக்குரல் வானத்தையும் பிளந்து கொண்டு உலகுக்கு வருகிறது. இனியும் சர்வதேசம் கண்மூடி விட முடியாது. எங்களின் குரலுக்கு பதில் சொல்லும் பொறுப்பு உங்களுக்கு தான் உண்டு என்பதை இந் நாளில் கூறி நிற்கின்றோம். இவ்வாறு முல்லை. மாவட்ட தமிழ்தேசிய எழுச்சி நாள் செயலணிக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஓர் இனத்தின் அனைத்துக் கட்டுமானங்களையும் உடையவர்களான ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் (11ஆம் பக்கம் பார்க்க)


## மருதனார்மடத்தில் ஆலயக்குருக்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு, நேற்று நண்பகல் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தின் குருக்கள் ஒருவர் பலியானார். மருதனார்மடம் ஆலயத்திற்கு அருகாமையில் நண்பகல் காரில் ஏறிச்செல்வதற்குத் தயாரானபோது இவர்காரின் கண்ணாடியூடாக சுடப்பட்டு காரினுள்ளேயே மரணம் அடைந்தார். சுந்தரேஸ்வரக்குருக்களின் மகனான சபாநாதசர்மா (வயது -24) (12ஆம் பக்கம் பார்க்க)

## ராசிக் குழு பொறுப்பாளர் கைக்குண்டுத் தாக்குதலில் பலி!

*மட்டு- உயர் பாதுகாப்பு வலயத்துள் சம்பவம்*

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையின் துணைப்படையாக இயங்கும் ராசிக்குழுப் பொறுப்பாளரை இலக்கு வைத்து நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் அக்குழுவின் பொறுப்பாளரான காந்தி என்றழைக்கப்படும் சார்ஜன்ட் நவரட்ணராஜா கொல்லப்பட்டுள்ளார்.



காலை 6 .15 மணியளவில் தமது முகாமிற்குள் உள்ள மலசல கூடத்திற்கு வழமை போல் காலைக் கடன்களுக்காக சென்றிருந்த சமயம் அருகிலுள்ள வளவொன்றிற்குள் இருந்து மலசல கூடத்திற்குள் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்காக பெரும் புரட்சிக்குத் தயாராகவேண்டும்.

— தியாகி லெப்.கேணல் திலீபன்



## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கிளி கந்தசுவாமி கோயிலுக்கும் TRO தண்ணி பக்ரறிக்கும் இடையில் கறுப்புநிற கண்ணாடி ஒன்று 13.09.2005 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றார். T.P 2285812 (6708)


# கிழக்கு மாகாணத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு ரோந்து

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்டைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் திருப்தியேற்பட்டால் மூடப்பட்ட தமது அரசியல்துறை அலுவலகங்கள் மீண்டும் திறக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கண்காணிப்புக் குழுவினர் ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தமது குழுவினர்கள் ரோந்து நடவடிக்கையில் யாரையும் எந்தவிடத்திலும் வைத்து சந்திக்கும் உரிமை தமக்கு இருப்பதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் கூறியுள்ளார்.

## உந்துருளி விபத்து நால்வர் காயம்

(வவுனியா)

வவுனியா பூங்கா வீதியில் நேற்று மதியம் இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அதில் பிரயாணம் செய்த நால்வரும் காயமடைந்துள்ளனர். முச்சக்கர வண்டி ஒன்றின் பின்னால் வந்த உந்துருளி முந்திச்செல்ல முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வவுனியாவில் அண்மை நாட்களாக உந்துருளி விபத்துக்கள் அதிகரித்திருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

## த.பு.கழகத்தின் விசேட நிகழ்வு

(செட்டிகுளம்)

வடகிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் 11 ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் விசேட நிகழ்வு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை வவுனியா விபுலானந்த வித்தியாலயத்தில் நடாத்தவிருப்பதாகவும் இதன்போது பொதுக்கூட்டமும் நடைபெறவிருப்பதாகவும் வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வில் 20 முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு உந்துருளிகள் வழங்கப்படவுள்ளது. (21)

## சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களை அதே இடத்தில் குடியமர்த்த முடிவு

(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் 215 குடும்பங்களை நலன்புரி நிலையம் அமைந்திருக்கும் இடத்தினிலேயே குடியமர்த்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இருக்கும் 67 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு அடுத்த ஆண்டு இந்த மக்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த இந்த மக்கள் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (21)


## பணிநிலைக்கான வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திற்கு திட்ட அலுவலர் பணிநிலைக்கு புதிதாக ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். தகைமையுடையவர்கள் தங்கள் தனிவரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகையுடனும், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் ஏனைய தகைமைச் சான்றிதழ்களுடன் 21.09.2005 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகாமையிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகைமைகள்:-

- ☐ க.பொ.த(உ/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன் அரச/அரச சார்பற்ற/தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- ☐ ஆங்கிலம் ஓரளவு எழுத, வாசிக்க பேச தெரிந்திருப்பதுடன் கணினி அனுபவமும் இருத்தல் வேண்டும்.
- ☐ தொழில்நுட்ப அறிவும், அனுபவமும் இருத்தல் வேண்டும்.

ஆளணி நிர்வாகப்பகுதி,
தமிழர்
புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(சி/12820)



## அறிவித்தல்

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 19-09-2005 திகதியிலிருந்து ஆரம்பமாகின்றன.

பதிவாளர்

(சி-12822)



## அறிவித்தல்

தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு தேசிய எழுச்சிப் பேரவையால் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தவிருப்பதனால் இப்போட்டிகளில் மரதன் ஓட்டம் (ஆண்கள்), மரதன் ஓட்டம் (பெண்கள்), தாச்சிப் போட்டி கிராமக் குழுக்கள், மைதான சிறு விளையாட்டுக்கள் என்பன நடைபெறும். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தங்களின் பதிவுகளை வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் எதிர்வரும் 20-09-2005 இற்கு முன் மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். மேலதிக விபரங்களை மாவீரர் மண்டபத்தில் உள்ள ஏற்பாட்டுக்குழுவினரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தே.எ.பேரவை,
வட்டக்கச்சி.

(6711)



# United Nations Development Programme

## Sustainable human development

UN
DP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

**Administrative and Logistics Assistant for Kilinochchi and Mullaitivu**
**Under the supervision of Head of Office:**

- Assist the Head of Office in the day to day administration of the Kilinochi/Mullaitivu Field Offices;
- Arrange travel clearance for all staff traveling to and from Kilinochi/Mullaitivu;
- Arrange for security clearance for all staff traveling to and from Kilinochi/Mullaitivu through ASC and Colombo Office;
- Draft correspondence and communications independently, as required;
- Arrange logistical support for visiting missions;
- Oversee the maintenance of the office building in UNDP Kilinochchi Compound;
- Coordinate vehicle movements to and from Kilinochchi;
- Supervise the drivers in Kilinochchi Field Office;
- Supervise maintenance of UNDP Vehicles assigned to Kilinochi/Mullaitivu Field Offices, including fuel supply
- Supervise maintenance of residential area in the Compound; generators, and other equipment
- Supervise the maintenance and housekeeping staff in Kilinochi Compound
- Ensure that the compound maintenance is carried out regularly and as required
- Maintain leave records of all staff based in Kilinochi/Mullaitivu Field Offices
- Responsible for incoming Phone calls, e-mail, post and distribution of these
- Assist Head of office in other assigned duties

**Educational Background**

- Secondary Education;
- University Degree in Accounting, Finance, Business or Public Administration would be desirable, but not a requirement.

**Experience**

- 2-3 years in Logistics and Administration is required , preferably with an international organization
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and knowledge of spreadsheet and database packages,
- Experience in handling of web based management systems.

**Languages:**

- Very Good command of English and Tamil;
- Ability to communicate in Sinhala an asset.

**Operational Skills:**

- Ability to work as a member of a multi-disciplinary and multicultural team;
- Strong interpersonal skills with good initiative
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office hours.
- Flexibility Organised and Trustfulness are values the person must have.

UNDP offers an attractive compensation package commensurate with experience. This non-career appointments is for a period of one year. Please send your curriculum vitae, with names of two non-related referees and contact telephone numbers to reach us by 21st September 2005 of this advertisement to UNDP, No 7 Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi (Fax 021 2285703). Please indicate position applied for on the top left hand corner of the envelope. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Qualified female candidates are encouraged to apply.

(12821)

# தற்கொலைத் தாக்குதல், தொடர்குண்டு வெடிப்பு;

## ஈராக்கில் 150 பேர் பலி; 200 பேர் காயம்

(பாக்தாத்)

**ஈராக்கில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைக குண்டுத்தாக்குதல் உட்பட பத்திற்கும் மேற்பட்ட தொடர்குண்டுத் தாக்குதலில் 150இற்கும் மேற்பட்டோர்பலியாகியுள்ளனர். 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள் ளனர்.**

ஈராக் தலைநகரான பாக்தாத்தில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் 114 பேர் பலியாகியுள்ளனர். 156 பேர் காயமடைந்துள்ளனர். தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் வாகனத்தில் இருந்தவாறு சியா முஸ்லிம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்போவதாகக் கூறி அழைத்து அவர்கள் அங்கு குழுமிய பின் குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

தற்கொலைப் படையாளி தனது வாகனத்தில் 220 கிலோ கிராம் வெடிமருந்தை கொண்டு வந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஈராக்கில் நடத்தப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்களில் ஏனையவர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.





ஈராக்கில் நடந்த தாக்குதலில் பலியான ஒருவரின் உடலை வைத்தியசாலையில் ஒப்படைக்கும் ஈராக்கிய பொலிசாரையும் பாதிக்கப்பட்ட இடத்தையும் படங்களில் காணலாம்.

# 100 வயதைத் தாண்டியவர்கள் அதிகம் வசிக்கும் நாடு ஜப்பான்

(டோக்கியோ)

உலகில் 100 வயதைத் தாண்டியவர்கள் அதிகம் வசிக்கும் நாடு என்ற பெருமையை ஜப்பான் தட்டிச் சென்றுள்ளது.

ஜப்பான் நாட்டின் குடும்பநல அமைச்சகம் வயதான முதியோர்களைக் கௌரவிக்கும் விதமாக கடந்த திங்கள் கிழமையை தேசிய விடுமுறை நாளாக அறிவித்தது. ஜப்பானில் 100 வயதைத் தாண்டி வாழும் முதியோர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் 100 வயதைத் தாண்டியவர்களின் எண்ணிக்கை 153 ஆக இருந்தது. தற்போது 25 ஆயிரத்து 606 பேர் நூறு வயதையும் தாண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறனர். ஜப்பானில் ஐந்தாயிரம் பேரில் ஒருவர் 100 வயதைக் கடந்து வாழ்கிறார். 100 வயதைத்தாண்டியவர்களில் 80 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் வயதான பெண்களை அதிகம் கொண்ட நாடு என்ற பெருமையை கடந்த 20 ஆண்டுகளாக ஜப்பான் தக்கவைத்துள்ளது. தற்போது 100 வயதைத் தாண்டியவர்கள் அதிகம் வசிக்கும் நாடு என்ற பெருமையையும் ஜப்பான் தட்டிச் சென்றுள்ளது.

# ஏவுகணை விற்றவருக்கு 47 வருட சிறைத்தண்டனை

(லண்டன்)

தீவிரவாதிகளுக்கு ஏவுகணைகளைவிற்ற இந்திய தொழிலதிபருக்கு அமெரிக்க நீதிமன்றம் 47 வருட சிறைத்தண்டனை விடுத்துள்ளது.

இவர் அமெரிக்காவைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கு ஆயுதம் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலையடுத்து அமெரிக்கசனாதிபதியின் உத்தரவின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார். லண்டனில் 2003 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவர் அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது அவருக்கு இந்தத்தண்டனை வழங்கப்பட்டது.

## பிரிட்டன் வாசிகள் ஏமாந்தவர்கள்

(லண்டன்)

பிரிட்டன் வாசிகள் ஏமாந்தவர்கள் பொருட்களைப் பறிகொடுப்பதில் முன்ன்ணியில் உள்ளவர்கள் என லண்டன் நிறுவனம் ஒன்று தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள யுகோவ் என்ற நிறுவனம் வெளிநாட்டு பயண அனுபவம் குறித்து கடந்த ஏப்ரல் 18முதல் 20 வரை இரண்டாயிரத்து 17 பயணிகளிடம் ஆய்வு நடத்தியது.

அதன் முடிவில் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளும் பிரிட்டன் நாட்டவர்களில் 10 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் ஏதாவது பொருளை பறிகொடுக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 50,000 அமெரிக்கப் படையினர் இவ்வாண்டு ஈராக்கிலிருந்து வாபஸ்!

### –ஈராக் அதிபர் ஜலால் தலபானி தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கில் இருந்து இந்த ஆண்டு இறுதியில் 50 ஆயிரம் அமெரிக்கப் படை வீரர்களை அமெரிக்கா திருப்பப் பெற்றுக்கொள்ளும்,"என ஈராக் அதிபர் ஜலால் தலபானி தெரிவித்துள்ளார்.

ஈராக் அதிபர் ஜலால் தலபானி வோஷிங்டனில் அமெரிக்க அதிபர் புஷ்ஷைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இது பற்றி செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

ஈராக்கில் இருந்து அமெரிக்கப்படைகளை படிப்படியாக திரும்பப் பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். இந்த ஆண்டின் இறுதியில் ஈராக்கிலிருந்து 50 ஆயிரம் படை வீரர்களை அமெரிக்கா திரும்பப் பெற்றுக்கொள்ளும் என நம்புகிறேன். அமெரிக்க வீரர்கள் தாயகம் திரும்புவதால் ஏற்படும் பாதுகாப்புப் பிரச்சினையை ஈராக்கின் படைவீரர்களைக் கொண்டு நிவர்த்தி செய்துகொள்வோம் என ஜலால் தலபானி தெரிவித்தார்.

ஈராக்கில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் அமெரிக்கப்படைவீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னராட்சியை எதிர்த்து நேபாளத்தில் போராட்டம்

(காத்மண்டு)

நேபாளத்தில் நடைபெறும் மன்னராட்சியை எதிர்த்து தலைநகர் காத்மண்டுவிலுள்ள 'மகேந்திர ரத்னா பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் இராணுவ வாகனம் ஒன்றை சூழ்ந்துகொண்ட மாணவர்கள், அதில் இருந்த வீரர்களை தாக்கினர் இந்தத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினருக்கு காயம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்களை கலைக்க இராணுவம் வானத்தை நோக்கிச் சுட்டது. இதனால், ஏற்பட்ட மோதலில் 12 மாணவர்களும் காயமடைந்தனர்.

# காசாவிலிருந்து படை வாபஸ் குறித்து இஸ்ரேலுக்கு அமெரிக்கா பாராட்டு

(நியூயோர்க்)

காசா முனையில் இருந்து படைகளை திரும்பப் பெற்ற இஸ்ரேலுக்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

காசா முனைப் பகுதியை இஸ்ரேலியர்கள் 38 ஆண்டுகளுக்கு முன் ஆக்கிரமித்துக் கொண்டனர். அதை மீட்க பலஸ்தீனியர்கள் போராடினர். பல ஆண்டுகளாக இருதரப்பிலும் இதற்காக கடும் மோதல்கள் நடந்துள்ளன.

இந்நிலையியல், காசா முனையில் இருந்து தனது படைகளை இஸ்ரேல் சமீபத்தில் திரும்பப் பெற்றது. அங்கு அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டன. குடியமர்த்தப்பட்ட யூதர்களும் வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

காசா முனைப்பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகள் திரும்பப் பெறப்பட்டது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இஸ்ரேல் பிரதமர் ஏரியல்ஷரோனின் மன உறுதியை இச்செயல் வெளிப்படுத்துகிறது. கடந்த சில மாதங்களாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம்இடையே அமைதிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் இந்த நடவடிக்கை ஒரு மைல்கல்.

இந்த வாய்ப்பை இரு நாடுகளும் முழுமையாக பயன்படுத்தி அப்பகுதியில் தொடர்ந்து அமைதி நிலவ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இஸ்ரேல் மக்களுக்கும், அந்நாட்டு அரசுக்கும் அமெரிக்கா அளித்து வரும் ஆதரவு தொடரும் என அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



நியூயோர்க்கில் ஐ.நா சபைக்கு எதிரில் பொலிஸ் வாகனம் காவல் கடமையில் நிற்பதைப் படத்தில் காணலாம்.



கெயிட்டியில் ஐ.நா படையுடன் நடைபெற்ற மோதலின் போது நான்கு பொதுமக்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சொலய்ஜ் நகரில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

# பாதிக்கப்பட்டது கறுப்பர்கள் என்பதால் நிவாரணப்பணி தாமதமாகவில்லை-புஷ்



(வோஷிங்டன்)

கற்றினா சூறாவளியால் அதிகளவில் பாதிக்கப்பட்டது கறுப்பர்கள் என்பதால்தான் நிவாரணப்பணிகள் தொடங்குவதற்குத் தாமதமானது என்ற குற்றச்சாட்டை அமெரிக்க சனாதிபதி புஷ் மறுத்தார்.

கடந்த மாதம் 29-ஆம் திகதி அமெரிக்காவின் லூசியானா மிசுசிப்பி, அலபாமா ஆகிய மூன்று மாநிலங்களை கற்றினா எனப்படும் சூறாவளி தாக்கியது.

அப்போது நியூ ஓர்லியன்ஸ் நகர்ப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது.

இதில் பத்தாயிரம் பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஊருக்குள் வெள்ள நீர்புகுந்ததால் இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து நகரை விட்டு வெளியேறினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவது தாமதமாகத் தொடங்கியது. இது அமெரிக்காவில் மிகப்பெரிய சர்ச்சையை உருவாக்கியுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் கறுப்பர்களாகவும், ஏழைகளாகவும் இருப்பதால் தான் நிவாரணப்பணிகள் மிக மெதுவாக நடந்து வருகின்றன என்று கறுப்பு இனத்தவர்கள் சிலர் குற்றம் சாட்டினர்.

இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்க சனாதிபதி மறுத்துள்ளார்.

# வவுனியா வடக்கு கல்வி வலய மாநாட்டில் 10 தலைப்புக்களில் ஆய்வு

(வவுனியா செய்தியாளர்)

**வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் "இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடலும், கல்வி விருத்திக்கான மூலோபாயங் களைத் தேடலும்'' என்ற தொனிப்பொருளிலான மாநாட்டில் பத்து தலைப்புக்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.**

இம் மாநாட்டில் "பிரதேசப் புவியியல் அமைப்பும், சமூகப் பொருளாதார நிலைமைகளும்'' என்ற தலைப்பில் ஆசிரிய நிலைய முகாமையாளர் சு.ஜெயச்சந்திரனும் , ''பிரதேசத்தின் உட்கட்டமைப்பு தொடர்பிலான பிரச்சினைகள்'' என்ற தலைப்பில் நெடுங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி இ.இந்திராஜாவும் "ஆரம்பக்கல்வி தொடர்பாக எதிர் கொள்ளப்படும் இடர்கள்'' என்ற தலைப்பில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவராஜாவும் இடைநிலைக் கல்வி தொடர்பாக எதிர்கொள்ளப்படும் 'இடர்கள்' என்ற தலைப்பில் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.ரகுபதியும் ''மாணவர்களின் பொதுப் பரீட்சை பெறுபேறுகள் பகுப்பாய்வு'' என்ற தலைப்பில் கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.மேகநாதனும், ''பாடசாலைகளின் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளும், முறைசாராக் கல்வியும்'' என்ற தலைப்பில் முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.சத்தியசீலனும் "அதிபர்களின் முகாமைத்துவதிறன், ஆசிரியர்களின் வாண்மை, பயிற்சி, தகுதி, மனோபாவம் பற்றிய இடர்கள்'' என்ற தலைப்பில் புதுக்குளம் மகாவித்தியாலய அதிபர் தா.அமிர்தலிங்கமும் ''பாடசாலைகளின் பௌதிக வளப் பற்றாக்குறை'' என்ற தலைப்பில் பாடசாலை வேலைகள் பரிசோதகர் சி.சிவகுமாரனும் "வலயக்கல்விப் பணிமனை பாடசாலைகள் தொடர்பான ஆளணிப் பற்றாக்குறை'' என்ற தலைப்பில் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.சிறிகரனும், "பிரதேசத்தின் கல்விக்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பு'' என்ற தலைப்பில் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம.ச. பத்மநாதனும் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்க உள்ளனர். நாளையும் நாளை மறுதினமும் இம் மாநாடு நடைபெறவுள்ளது. (10)

## கிளி.மகாவித்தியாலய மாணவர்களின் உற்பத்தி செயற்திறன் கண்காட்சி

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் உற்பத்திச் செயற்திறன் கண்காட்சி நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் யோகநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், யாழ்பல்கலைக்கழக பேராசிரியர் சின்னத்தம்பி, கிளிவலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் முருகவேள் ஆகியோர் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி மாணவர்களின் உற்பத்திச் செயற்திறன் கண்காட்சியினை ஆரம்பித்துவைத்தனர்.

கண்காட்சியில் வைக்கப்பட்ட நான்காம் ஆண்டு மாணவனால் உருவமைக்கப்பெற்ற புதிய மாதிரி வீட்டுத் தோட்டத்தினையும், வீடமைப்பினையும் பார்வையிட்டு பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் மாணவனின் செயற்திறனை பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பெற்றுக்கொள்ளவும்

துணுக்காய், மாங்குளம் காவல் பணிமனையினரால் கண்டெடுக்கப்பட்ட ஈருருளிகள் மல்லாவி தமிழீழ மாவட்டநீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளதால் உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (20)



கண்டாவளை புளியம் பொக்கணை நவஜீவனம் பகல் பராமரிப்பு நிலையத்தில் கடந்த ஏழாம் திகதி நடைபெற்ற முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப் பொருட் கண்காட்சியில், மங்கல விளக்கினை கல்மடுநகர், அ.த.க பாடசாலை முதல்வர் இரவீந்திரன் ஏற்றி வைப்பதனையும் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். (படங்கள்:-வதனன்)

## முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான ஆக்கப்பொருட் கண்காட்சி

(வட்டக்கச்சி)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய ஒருங்கமைப்பில் வட்டக்கச்சி கிளி.கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்படும் 21முன்பள்ளிகளுக்கான ஆக்கப் பொருட் கண்காட்சியானது கடந்த திங்கட்கிழமை 9.30 மணிக்கு இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் கிளி.கிழக்கு புனர்வாழ்வுக்கழக நிர்வாக அலுவலர் புஸ்பகுமார் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் மு.குமாரசாமியும் வீதயாளனும் இராமநாதபுரம் மேற்கு பாடசாலை உப அதிபர் அகிலநாயகமும் ஏற்ற தேசியக் கொடியை வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடரும் கிளி.கிழக்கு புனர்வாழ்வுக் கொடியினை கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சிவரஞ்சினியும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியினை கல்வி மேம்பாட்டு இணைப்பாளரும் ஏற்றிவைத்தனர். கண்காட்சி மண்டபத்தினை கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவன உதவிப் பணியாளர் நவநீதன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சிறார்களின் பெற்றோர், பொதுமக்கள் பல்துறை சார்ந்த நிறுவனங்களின் பணியாளர்கள், போராளிகள், மாணவர்கள், முன்பள்ளி பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன் ஆகியோர் உட்பட பலர் கண்காட்சியினைப் பார்வையிட்டனர்.

தலைமையுரையினை:-கிளி. கிழக்கு புனர்வாழ்வுக்கழக நிர்வாக அலுவலர் புஸ்பகுமாரியும், வரவேற்புரையினைகள அலுவலர் நா.யோகராணியும், ஆசியுரையினை பாடசாலையின்உபஅதிபர்அகிலநாயகமும் சிறப்புரைகளை நிறுவனச் செயலாளர் குமாரசாமியும் பிரதேச பொறுப்பாளர் சுடர் ஆகியோரும் வழங்கினார்கள் [illegible]னைத் தொடர்ந்து சிறார்களி[illegible] நிகழ்வுகள் இடம்பெற்றன.

இ[illegible] கிளிநொச்சி அக்கராயன் [illegible]தேச முன்பள்ளிகளுக்கிடையிலான கண்காட்சி நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஸ்கந்தபுரம் இல.1அ.த.க பாடசாலையில் நடைபெற்றது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ச.கிருஸ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழர்புனர்வாழ்வுக் கழகம்,முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டதையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்பபிள்ளைப் பிரிவு பணிப்பாளர் பாண்டியன் சம்பிரு தாயபூர்வமாக நாடாவினை வெட்டி கண்காட்சி மண்டபத்தினை திறந்துவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய பிரதேச கட்டமைப்பின் ஆதரவுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் 22 முன்பள்ளிகளுக்கிடையிலான மேற்படி கண்காட்சியில் பெருந்திரளான மக்கள் கலந்து கண்காட்சியினை பார்வையிட்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,12)

## தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் பதினெட்டாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி முன்னோடிவேலைத்திட்டங்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசங்களில் தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 18ஆம்ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முன்னோடி வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில் இன்று முதல் மேற்படி பிரதேசங்களில் கிராமங்கள் தோறும் சிரமதானங்கள் இடம் பெறுகின்றன. அத்துடன் தியாகி திலீபனின் திருவுருவப்படங்கள் வைத்து நினைவு கூரும் வகையில் மக்களால் நினைவாலயங்கள் அமைத்தும் வீதிகளில் சிகப்பு , மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரித்தும் வருகின்றனர். அத்தோடு முக்கிய சந்திகளில் பதாகைகள் கட்டப்பட்டு வருகின்றன.

இன்றைய நிகழ்வுகள் பாண்டியன் குளம் பிரதேசத்தில் பாலிநகர் மாவீரர் மண்டபத்திலும் நட்டாங்கண்டல் மாவீரர் மண்டபத்திலும் துணுக்காய் பிரதேச மல்லாவி நகர் பகுதியில் அமைந்த மாவீரர் மண்டபத்திலும் காலை ஒன்பது மணிக்கு நினைவு அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. (24)

## தரம்-I மாணவர்களை சேர்ப்பதற்கு விண்ணப்பித்த சகல பெற்றோர்களுக்கான சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 2006 ஆம் ஆண்டில் தரம் I இல் மாணவர்களைச் சேர்ப்பதற்காக விண்ணப்பம் கொடுத்த சகல பெற்றோருக்குமான சந்திப்பு நாளை நண்பகல் 12.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி சந்திப்பில் பிள்ளைகளை பாடசாலையில் அனுமதிப்பது தொடர்பாக சில முடிவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் விண்ணப்பம் செய்த அனைத்துப் பெற்றோர்களும் சமுகம் தருமாறு அதிபர் வேண்டியுள்ளார். (கு)

## 2,70,000 வாக்காளர் அட்டைகள் வவுனியாவிற்கு அனுப்பி வைப்பு

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 2,70,000 வாக்காளர் அட்டைகள் வவுனியாவில் உள்ள வன்னி தேர்தல் பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவ் வாக்காளர் அட்டைகள் வவுனியா மாவட்டத்தில் உள்ள 1,4,884 வாக் காளர்களுக்கும் மன்னார் மாவட்டத்தில் உள்ள 78,906 வாக் காளர் களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள66,596 வாக்காளர் களுக் குமாக பிரிக்கப்பட்டுவாக்காளர் அட்டைகள் எழுதும் பணி நடைபெற்று வருகின்றது. (10)

## பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

நியாப் II திட்டத்தின் கீழ தருமபுரம் மேற்கு கிராமத்தில் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நிகழ்வு தருமபுரம் பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த ஒன்பதாம் திகதி தருமபுரம் மேற்கு கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.ஞானசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் மங்கல விளக்கினை பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் க.கந்தசாமி, பெரியகுளம் கிராம உத்தியோகத்தர் இ. சிவராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.



வரவேற்புரையினை தருமபுரம் மேற்கு மாதர்சங்கத் தலைவி திருமதி ப. தனலட்சுமி வழங்கினார். ஆசியுரையினை கண்டாவளைப்பிரதேச கமக்கார அமைப்புக்களின் தலைவர் சி.தணிகாசலம், மக்கள் வங்கி முகாமையாளர் க. கந்தசாமி, தருமபுரம் கிராமத்தைச் சேர்ந்த மூத்த மக்கள் சேவையாளரும், சமாதான நீதவானுமான செ.புஸ்பராசா மற்றும் பலர் வழங்கினர். சிறப்புரையினை கண்டாவளைப்பிரதேச செயலர் சி. சத்தியசீலன் வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

## இருதய மருத்துவ நிபுணர் சிகிச்சை

கிளிநொச்சியில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் யாழ்போதனா மருத்துவமனையிலிருந்து வருகை தரவிருக்கும் இருதய மருத்துவ நிபுணர்களால் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை இருதயநோய்கள், மாரடைப்பு,உயர்குருதியமுக்கம், இருதய முட்டுவாதம், இருதய கட்டமைப்பில் பாதிப்பு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட கருவிகளினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது. பயன்பெறவிரும்புவோர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை கிளி நொச்சி வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

# முகமாலை படைச் சோதனைச் சாவடியில் பொது மக்கள் நீண்ட நேரம் விசாரணை

(முகமாலை)

**முகமாலைச் சோதனைச் சாவடியூடாக வரும் மக்கள் பலர் தொடர்ந்தும் படையினரால் மணிக்கணக்கில் தடுத்து வைத்து படை புலனாய்வுத்துறையினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.**

இளைஞர்கள் யுவதிகளிடத்தில் சிறிலங்காப் படை புலனாய்வாளர்கள் தமக்கு தகவல்கள் தருமாறு வற்புறுத்தி வருவதாகவும், பெருந் தொகைப் பணம் தருவதாகவும் தாங்கள் சொன்னவற்றை செய்தால் சிறிலங்கா அரசின் செலவிலேயே வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இளம் பெண்களிடம் கொச்சையான வார்த்தைகளையும் படை புலனாய்வாளர்கள் உபயோகித்து வருவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# மண் அகழ்வில் ஈடுபட்ட வாகனம் இனந்தெரியாதோரால் தீக்கிரை

நாவற்குழிப் பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கன்டர் ஒன்று இனந் தெரியாதோரால் கடத்தி வரப்பட்டு சாவகச்சேரி சோலையம்மன் கோவில் பின் வீதியில் வைத்து தீவைத்து எரிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் கன்டர் முற்றாக எரிந்துபோயுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னால் கைதடிப் பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று இனந்தெரியாதவர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது தெரிந்ததே. (28)



# தியாகி திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் குடாநாட்டில் சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அனைத்து பகுதிகளிலும், தியாகி லெப். கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளை சிறப்புற அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிராக அகிம்சை ரீதியில் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து ஒரு சிறுதுளி நீர்கூட அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தியாகி லெப் கேணல் திலீபன் அவர்களது நினைவு நாள் ஆரம்ப நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ். பல்கலைக்கழகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள நல்லூர் ஆலய முன்றல் ஆகிய இடங்களில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் காலை 9.55 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாக வுள்ளன. (36)

# சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க யாழ்.மாவட்டத்தில் 701,938 பேர் தகுதி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 701,938 பேர்தகுதி பெற்றிருப்பதாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 11 தொகுதிகளில் 624 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் சனாதிபதித் தேர்தலுக்காக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் இறந்தவர்கள் சுனாமி தாக்கத்தால் இறந்தவர்களின் விபரங்கள் திரட்டப்பட்ட பின்னரே யாழ்ப்பாண மாவட்டத்தில் 701,938 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கீ)

# பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்விற்காக தென்மராட்சியில் தொடர் கலந்துரையாடல்

(தென்மராட்சி)

பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்விற்கான தொடர் கலந்துரையாடல்கள் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள், பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் மா. கிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொங்கு தமிழ் -2005 ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் தென்மராட்சி பொது அமைப்புக்களின் தலைவர் க.அருந்தவ ர் உரையாற்றினார்.

சங்க உறுப்பினர்களும் பணியாளர்களும் இணைந்து தங்கள் தங்கள் பகுதிகளில் உள்ள மக்களுக்கு பிரகடன நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்றும் மாதர் சங்க உறுப்பினர்கள் பெண்களுக்கான பரப்புரைகளில் சிறப்பாக ஈடுபடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று மீ ைை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி. சி.சிவதர்மிகா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன், யாழ் பல்கலைக்கழக மாணவர் பேரவையைச் சேர்ந்த விஜயரூபன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

எழுச்சிப் பிரகடன நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வை கிராம மட்டத்தில் மேற்கொள்வதற்காக தென்மராட்சியிலுள்ள ஒன்பது முன்பள்ளிக்குடும்பங்களும் தலா ஒவ்வொரு கிராமத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டன.

# மின்சார சபைக்கான புதிய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

இலங்கை மின்சார சபைக்கான கணினி மயப்படுத்தப்பட்ட புதிய அலுவலகம் நாளை திறந்து வைக்கப்படவிருப்பதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் மனோகரா திரையரங்கு சந்திக்கு அருகில் இப் புதிய அலுவலகம் கட்டப்பட்டு இருப்பதாகவும், இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளரால் இந்தப் புதிய கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படவுள்ளதாகவும், நாளை முதல் இப் புதிய கட்டடத்தில் பணிகள் ஆரம்பிப்பதுடன் மின் கட்டணத்தை காசோலையாக செலுத்த முடியும் என்றும் வெகு விரைவில் மின் கட்டணத்தை பணமாக செலுத்தும் முறை நடைமுறைப் படுத்தப்படும் என்றும் மின்சார சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (28)

# இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வளலாய் பாடசாலையை இயக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வளலாய் அமெரிக்கன் மிசன் பாடசாலையை மீளவும் இயங்க வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து யாழ்வலயக் கல்வி அதிகாரியின் கவனத்திற்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன் கடந்த பல வருடங்களாக இராணுவத்தால் இப் பாடசாலை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் வளலாய் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் பிள்ளைகள் இடைக்காடு சென்றே படிக்கும் சிரமமான ஒரு சூழல் உள்ளதாகவும், இப் பகுதி மாணவர்களின் நலன் கருதி உடனடியாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து இப் பாடசாலையை விடுவித்து பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# யாழ். காக்கைதீவுப் பகுதியில் கூட்டெரு தயாரிப்பு தொழிற்சாலை

(வலிகாமம்)

யாழ். காக்கை தீவுப் பகுதியில் நோர்வே நாட்டின் நொராட் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கூட்டெரு தயாரிப்புத் தொழிற்சாலை விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதென்று யாழ் மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே சிவஞானம் தெரிவிக்கின்றார்.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சேகரிக்கப்பட்டு காக்கை தீவு தரவைப் பகுதியில் கொட்டப்பட்டு வரும் குப்பைகளிலிருந்தே கூட்டெருப் பசளை தயாரிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டெரு தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கு நொராட் நிறுவனம் சுமார் 24 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியிருக்கின்றது என்றும் இத் தொழிற்சாலை மிக விரைவில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது என்றும் மாநகர சபை ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

இத்தொழிற்சாலை தயாரிப்பின் மூலம் யாழ். குடாநாட்டு விவசாயத் திற்குத் தேவை இயற்கைப் பசளை உற்பத்தியை நிறைவு செய்யக்கூடியதாக இருக்கும் என்று மாநகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (37)

# சுற்று மதில் அமைப்பு

(வலிகாமம்)

வலி- மேற்கு சுழிபுரம் பிரதேச சபைத் தலைமை அலுவலக வளாகத்தைச் சுற்றி புதிய சுற்று மதில் அமைக்கப்பட்டு வருகின்றது என்று சபைச் செயலாளர் இ. இராசதுரை தெரிவிக்கின்றார்.

நீண்ட வருடங்களாக சுற்று வேலி எதுவும் இல்லாது இருந்து வந்த இந்தத் தலைமை அலுவலக கட்டட வளாகத்தைச் சுற்றி சுற்று மதில் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் அடுத்த மாதம் முற் பகுதியில் இப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை வலி- மேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலக வளாகத்திற்கு சமீபத்தில் சுற்று மதில் ஒன்று அமைக்கப்பட்டு முடிக்கப்பட்டிருப்பதோடு சபை அலுவலகக் கட்டடமும் புனரமைப்புச் செய்யப்பட்டும் இருக்கின்றது எனவும் சபைச் செயலாளர் தெரிவித்தார். (37)

# கூட்டுறவு சங்கத்திற்கு அரச அதிபர் நிதியுதவி

(வலிகாமம்)

மானிப்பாய் கோவில் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய பணிமனைக்கு கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு யாழ். மாவட்ட அரச அதிபர் 20 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கி வழங்கியுள்ளார்.

இந் நிதி மூலம் தற்போது கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தற்போது ப.நோ.கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயம் இயங்கும் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாக இருப்பதாலும்,தலைமைப் பணிமனை காரியங்களை முன்னெடுப்பதற்கான விஸ்தீரணம் கொண்டதாக இல்லாதிருப்பதனாலுமே புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இக் கட்டடத்தை அமைப்பதற்கு யாழ். மாவட்ட அரச அதிபர் ஒதுக்கித்தந்திருக்கின்ற நிதி கட்டட வேலைகளை முடிப்பதற்கு போதுமானதாக இல்லை. இக் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு இன்னும் 30 இலட்சம் ரூபா நிதி தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதென சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவிக்கின்றார். (37)

## அடிப்படை வசதிகள்

உரும்பிராய் பகுதியில் உள்ள செல்வபுரம், இலுப்பையடி கிருஷ்ணன் கோவிலடி, யோகபுரம் இந்துக் கல்லூரியில் உள்ள நலன்புரி நிலையம் போன்றவற்றின் தங்கிய பகுதிகளுக்குப் பல ஆண்டுகளாக நிலவி வரும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வான அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான யு.என்.எச்.சி.ஆர், ஜிரிஇசற் போன்றவற்றின் உதவியுடன் சுகாதார வசதிகள், மலசல கூட வசதிகள், குடிநீர் குழாய்கள் பொது மண்டபம் போன்றவற்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# புலிகளின் வெளியேற்றம்

# சிதைவுறும் யுத்த நிறுத்த உடன்பாடு!

தமிழர் தாயகப்பகுதியில் இராணுவக் கட்டப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபட்டுவந்த விடுதலைப்புலிப் போராளிகள் அனைவரும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். போராளிகளின் பாதுகாப்பிற்கு எந்தவித உத்தரவாதத்தையும் அளிப்பதற்கு சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் தயாராக இல்லாத நிலையிலேயே இவ் வெளியேற்றம் இடம்பெற்றுள்ளது.

இப்பாதுகாப்பு அற்ற நிலை என்பது ஆதாரங்களற்ற தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முடிவல்ல. பல பொறுப்பாளர்கள்,தளபதிகள், பல போராளிகள் கொல்லப்பட்டும், படுகாயப்படுத்தப்பட்ட நிலையிலுமே இப்பாதுகாப்பு இன்மை உறுதிசெய்யப்பட்டது. அத்தோடு, இத்தீர்மானமானது சடுதியாக எடுக்கப்பட்ட முடிவுமல்ல. படிப்படியாக எச்சரிக்கை செய்யப்பட்டும், கட்டம் கட்டமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டநிலையிலுமே இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டின் தொடக்கத்தில் விடுதலைப்புலிகள் மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் படுகொலை செய்யப்பட்ட காலத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் பாதுகாப்புக் குறித்த இவ் எச்சரிக்கை அடிக்கடி வலியுறுத்தப்பட்டதாகியது. ஆனால், இவற்றில் பயன் கிட்டாத நிலையிலேயே முதற்கட்ட நடவடிக்கையாக மட்டு- அம்பாறை மாவட்டங்களிலிருந்து தமது அரசியல் துறைப் போராளி களை விடுதலைப் புலிகள் விலக்கிக்கொண்டனர்.

ஆனால், விடுதலைப்புலிகளின் இவ் எச்சரிக்கைகள், நடவடிக்கைகள் என்பன சிறிலங்கா அரசாங்கத்தி



னாலோ, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினாலோ கவனத்திற் கொள்ளப்படாத நிலையிலேயே விடுதலைப் புலிகள் தற்பொழுது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து முற்றாகத் தமது போராளிகளை விலக்கிக்கொள்ள வேண்டியதான சூழ்நிலை ஏற்பட்டது

விடுதலைப்புலிகளின் இவ் வெளியேற்றமானது பலவீனமடைந்துவரும் யுத்த நிறுத்த உடன்பாட்டை மேலும் பலவீனமடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இச்சம்பவமானது தனிப்பட்டதொரு சம்பவம் அல்ல. தொடர் சம்பவங்களின் உச்சமானதொரு நிலையே இதுவாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது நீண்டதொரு நடவடிக்கையாகவே சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதிலும் குறிப்பாகக் கிழக்கில் இது வழமையானதொரு சம்பவம் போல் ஆகியிருந்தது.

இதனால், பல போராளிகள் கொல்லப்பட்டனர். இதேசமயம், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டிய சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு இப்படுகொலைகளுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்பது போன்று அறிவித்தலைவிட்டவண்ணம் இருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறும் சம்பவங்களுக்கு தார்மீக ரீதியில் கூடத் தாமே பொறுப்பேற்க வேண்டும் என்பதைக் கூட சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இதேவேளை சிறிலங்கா இராணுவத்தரப்பு இப்படுகொலைகளுடன் தமிழ் இனவிரோதக் குழுக்களைச் சம்பந்தப்படுத்தவும் முற்பட்டது.

ஆகையினால், தீர்க்கப்படாது நீடித்த இப்பாதுகாப்பு விவகாரம் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் மரணத்துடன் புதியதொரு வடிவத்தைப் பெற்றது. அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்கான பாதுகாப்புத் தொடர்பான விவகாரம் முதன்மை பெற்றது.

இந்நிலையில் யூன் மாதத்தில் விடுதலைப்புலிகளின் தொடரணி மீது வெலிக்கந்தையில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து இது உச்சக் கட்டத்தை அடைந்தது. இத்தாக்குதலையடுத்து,விடுதலைப் புலிகள் தீவிரமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்கள் ஆனார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் போக்குவரத்திற்கான பாதுகாப்புத் தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை அவர்கள் அரசாங்கத்திடம் கோரினர்.

ஆனால், அரசாங்கம் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதற்கும் தயாராக இல்லை. ஒரு கட்டத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி பாதுகாப்பளிக்க வேண்டிய கடப்பாடு தமக்கு இல்லை என வாதிட்டது. பின்னர் பாதுகாப்பு அளிப்பது தொடர்பில் கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் விதித்தது. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இணக்கப்பாடான முடிவொன்று எட்டப்படும் எனக் கூறினும் அதனால் வெற்றிபெற முடியவில்லை.ஆனால் விவகாரம் இழுத்தடிக்கப்பட்டதே ஒழிய முடிவெதுவும் எடுக்கப்பட்டதாக இல்லை.

இதனை போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்திற்கு அரசாங்கம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கவில்லை என்றும் அர்த்தம் கொள்ள முடியும் ஏனெனில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு இதுவரை உத்தரவாதம் அளிக்க அரசாங்கம் தயாராக இல்லை.

இதேவேளை, புலிகளின் எச்சரிக்கை, அறிவுறுத்தல் என்பனவற்றைப் புலிகளின் பலவீனம் என சிறிலங்கா அரசதரப்பு கருதுவது போன்றும் அவர்களின் நடவடிக்கை உணரவைக்கின்றன. போக்குவரத்திற்கான பாதுகாப்புத் தொடர்பாக விடுதலைப்புலிகள் வழங்கிய 14 நாள் காலக்கெடுவும் அவ்வாறே அரசால் நோக்கப்பட்டது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது விளைவுகளின் விபரீதத்தை அது உணரத் தவறுவதன் வெளிப்பாடேயாகும்.



இந்தவகையில் போக்குவரத்து விவகாரம் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்குச் சவால் விடுப்பதாக இருந்த வேளையில், சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு விவகாரம், பாதுகாப்பான போக்குவரத்து விடயத்தைப் பின்தள்ளியது என்றே கூறலாம். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கம் முடிவொன்றுக்கு வருதல் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எழுந்த நிலையில் அனைவரது கவனமும் திசை திருப்பப்பட்டது.

ஆனால், நீண்ட இழுத்தடிப்புக்கள், மாற்றங்கள் என்பனவற்றுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் வழமை போலவே இவ் உடன்பாட்டையும் அமுலாக்கச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தயாராக இருக்கவில்லை. தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியற்குழப்பங்களைப் பயன்படுத்தி பொதுக் கட்டமைப்பின் செயற்பாடு பிற்போடப்பட்டது. அன்றி கைவிடப்பட்டது.

இப்பொதுக்கட்டமைப்பு விவகாரம் வெற்றிபெற்றதோ இல்லையோ, ஆனால், சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறிலங்கா ஆயுதப்படையின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தீவிரம் பெற்றவையாகவே இருந்தன. போராளிகள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் காரணமற்ற கைதுகள், என்பன தொடர்கதையாகவே நீடித்தன.

இந்நிலையானது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில், விடுதலைப் புலிகளின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் அமைந்ததெனலாம். அதாவது விடுதலைப் புலிகளின் உயிர்களுக்கு உத்தரவாதம் எதுவும் கிடையாது என்ற நிலையில் விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேற வேண்டியது தவிர்க்கப்பட முடியாததாகியது.

இத்தகையதொரு சூழ்நிலை ஏற்படுவதற்கான முழுப் பொறுப்பையும்,யுத்தநிறுத்த உடன்பாட்டை சிறிலங்கா ஆட்சியாளர்கள் சீரான முறையில் அமுலாக்காமையே காரணமாகும். இத்தகைய நிலையானது தற்பொழுது தான் ஏற்பட்டதொன்றல்ல. யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தான ஆரம்பத்தில் இருந்தே காணப்பட்டதொன்றாகும்.

இந்தவகையில் அமுல் செய்யப்படாத யுத்தநிறுத்த விதிகளில் தமிழ் துணை இராணுவக் குழுக்கள் தொடர்பாக உள்ள உடன்பாட்டு விதி (1.8) அமுலாக்கம் பெறாமை இன்றைய நெருக்கடிக்கு முக்கிய காரணியாகும். உடன்பாட்டின் 1.8விதி, "தமிழ் துணை இராணுவக் குழுக்களை யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் சிறிலங்கா அரசு ஆயுதமற்றவர்களாகவும், இந்த அணிகளிலுள்ள ஆட்களுக்கு சிறிலங்கா அரசு தனது ஆயுதப் படையின் கட்டுப்பாட்டிற்குள்ளும், ஒழுங்கமைப்பிற்குள்ளும் இணையும் வாய்ப்பை அளித்து வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் பணிபுரிய வகை செய்யும்" எனக் கூறுகின்றது.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர் எவரும், எவ்வேளையிலும் இவ் விதியை அமுலாக்கம் செய்யத்தயாராக இல்லை. மாறாக இத்துணை இராணுவக்குழுக்களை பலப்படுத்தவும், புதிய விதிகளைத் தோற்றுவிக்கவுமே முனைந்தனர். இந்தவகையில் உருவாக்கப்பட்டதே கருணாவின் பெயரில் ஒரு குழுவாகும், அதுமட்டுமன்றி இத்துணை இராணுவக் குழுக்களுக்குப் போதிய ஆளணி இல்லாத நிலையில் இக்குழுக்களின் பெயரில் சிறிலங்கா ஆயுதப்படையே செயற்படவும் செய்தன.

இந்நிலையில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் வழிகாட்டுதலில் அன்றி, ஆயுதப் படைத்தரப்புடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் கூட கட்டுப்படுத்த முடியவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்துணைக் குழுக்கள் இயங்குகின்றன என்பது ஊகிக்கவும், உணரவும், உறுதிப்படுத்தவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் முடிகின்ற போதும் கண்காணிப்புக்குழு இதனை ஒரு பெரும் போர்நிறுத்த மீறலாக வெளிக்கொண்டுவர முற்படவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

அதாவது, விடுதலைப் புலிகளின் அரசியல்பணி நடவடிக்கையின் இணைந்த தொன்றாக தமிழீழ தேசியக் கொடி ஏற்றலினைப் போர்நிறுத்த மீறல் எனப் பரபரப்புப்படுத்திய அளவிற்குக்கூட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் துணை இராணுக்குழுக்களின் செயற்பாட்டை கண்காணிப்புக்குழு கவனத்திற்கொண்டதாக இல்லை.

இத்தனைக்கும் தமிழீழத் தேசியக் கொடியேற்றுதலை ஒரு போர்நிறுத்த உடன்பாட்டு விதி மீறலென யுத்த நிறுத்த உடன்பாட்டில் எப்பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை உடன்பாட்டு விதிகளுக்கு உட்பட்டதான விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்து, இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியற்பணியின் மீதான பாதுகாப்பு என்பன கூட சிறிலங்கா அரசாங்கத்தில் புறந் தள்ளப்பட்ட விடயங்களாகின.

அதாவது விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்துத் தொடர்பான விவகாரம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களும் இரு தடவை கிளிநொச்சி வந்து பேசினர். அரசாங்கம் சில ஏற்பாடுகளுக்கு இணங்குவதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனால், இறுதியில் எதுவித அக்கறையும், கவனமுமின்றி அவை கிடப்பில் போடப்பட்டன.

இதனைவிட சுனாமிப் பொதுக் கட்டமைப்புப் பற்றிப் பரபரப்பாக பேசப்பட்டது. நோர்வேத் தரப்பு முன்வைத்த பொதுக்கட்டமைப்புத் திட்டத்தில் மாற்றத்தின்மேல் மாற்றம் என்பவற்றை மேற்கொண்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனால், பின்னர் ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்ட பிணக்கால் அதுவும் கைவிடப்பட்ட நிலையை எட்டியது.

இறுதியில் யுத்தநிறுத்த உடன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டபோதிலும், வெளிநாடுகளில் பேசுவதற்கு அரசாங்கம் போட்ட முட்டுக்கட்டைகளினால், அப்பேச்சுவார்த்தைகளும் இடம்பெறாமல் போயுள்ளது. வெளிநாடு ஒன்றில் சுமுகமான சூழ்நிலையில் நடைபெறக் கூடிய பேச்சுக்களைத் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது மேலாதிக்கத்தின் கீழ் நடைபெற வேண்டுமென அது கருதியது. இதனால் யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகளும் இடம் பெறாமல் போனது.

இந்தவகையில் அரசாங்கம் ஒரு புறத்தில் யுத்தநிறுத்த விதிகளை அமுல்படுத்தத்தயாராக இல்லாததோடு -யுத்தநிறுத்தம் தொடர்பாக எழுந்துள்ள முட்டுக் கட்டைகளை போக்குவதற்கான பேச்சு வார்த்தைகளையும் நடத்துவதற்குத் தயாராக இல்லை என்பதே இன்றைய நிலையாகும்.


இதன் விளைவே இன்று விடுதலைப்புலிகள்- தமது அரசியல் பணிப் போராளிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து மீளப்பெற வேண்டிய கட்டாயத்தைத் தோற்றுவித்துள்ளது. இந்நடவடிக்கைகளானது யுத்தநிறுத்ததை விளிம்பிற்குக் கொண்டு வந்துள்ளது எனின் மிகையில்லை.

வேறொரு விதமாகக் கூறுவதானால், போர்நிறுத்த விதிகளில் பல சிறிலங்கா அரசாங்கத்தால் கைவிடப்பட்ட அன்றி செயலிழக்கச் செய்யப்பட்ட நிலையில், யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளதெனில் மிகையாகாது. அதுமட்டுமன்றி சனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்து தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் அரசியல் நகர்வுகள், போர்நிறுத்த உடன்பாட்டை தவிர்க்க முடியாத அளவில் பலவீனப் படுத்துபவையாகவும் மாறியுள்ளன.

—— ஜெயராஜ்

# முல்லை தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனம்















# புதுக்கடை நீதிமன்றத்தினுள் தமிழ்ப்பெண் கைது!

(கொழும்பு)

புதுக்கடை நீதவான் நீதிமன்றதினுள் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடியதாகக்கூறி தமிழ்ப்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். புதுக்கடை மூன்றாவது நீதவான் நீதிமன்றவளாகத்தில் சட்டத்தரணியைப் போல நடமாடியதாக ஏனைய சட்டத்தரணிகள் சிறிலங்காப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனை அடுத்து சிறிலங்கா பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர்தன்னைப்பற்றிய அடையாளங்களை உரியவகையில் நிரூபிக்கத் தவறியுள்ளதுடன் அவரிடம் இருந்து மூன்று அடையாள அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் பகல் கைது செய்யப்பட்ட இந்தப் பெண்ணின் பெயர் முத்துலிங்கம் காந்திமதி எனத் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபரான முத்துலிங்கம் காந்திமதி வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

# சனாதிபதியின் ஆறு அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க் சென்றுள்ளதால் ஆறு அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், பாடசாலைக் கல்விகள் அமைச்சராக மங்கள சமரவீரவும், உயர்கல்வியமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும், தகவல் ஊடக அமைச்சராக டிலான் பெரேராவும், நிவாரண புனரமைப்பு அமைச்சராக டி.எம். தஸநாயக்கவும், போக்குவரத்து அமைச்சராக லசந்த அழகியவன்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் 60ஆவது பொதுக்கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்க பங்கேற்கின்றமை தெரிந்ததே.

# முஸ்லிம் கவுன்சிலின் நிபந்தனைகளை ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ஏற்பு!

## – கவுன்சிலின் பேச்சாளர் தெரிவிப்பு

சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில் முன்வைத்த நிபந்தனைகளை ஐக்கிய தேசியக்கட்சி சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளதாக முஸ்லிம் கவுன்சில் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் கவுன்சில் முன்வைத்த நிபந்தனைகளை அவதானமாக ஆய்வு செய்த ரணில் தான் சனாதிபதியாக தேர்வானால் அவற்றைச் செயற்படுத்துவேன் என்று உறுதியளித்துள்ளதாக கவுன்சிலின் பேச்சாளர் கூறினார்.

இந்தக் கவுன்சிலில் சிறிலங்காவின் 58 முஸ்லிம் அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எதிர்வரும் காலங்களில் நடாத்தப்படுகிற அமைதிப் பேச்சுகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் கவுன்சில் முதன்மைக் கோரிக்கையாக வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இடப்பெயர்வுக்குள்ளான முஸ்லிம்களுக்கு மீளமைப்பு நிவாரணம் பெறுதல், முஸ்லிம் தரப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம், அரச நிறுவனங்களில் முஸ்லிம் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புத்தரப்பில் முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம், முஸ்லிம்களின் கல்வி மேம்பாடு உள்ளிட்டவைகளையும் முஸ்லிம் கவுன்சில் முன்வைத்துள்ளது.

ஒவ்வொரு மாகாணசபையும் ஒரு முஸ்லிம் அமைச்சரைப் பெற்றிருக்க வேண்டும். முஸ்லிம்களின் கலாச்சாரம் மற்றும் உரிமைகளுக்காக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பொறுப்பு வழங்க வேண்டும் என்று மேலும் சில நிபந்தனைகளையும் அந்தக் கவுன்சில் முன்வைத்துள்ளது.

இன்று இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக சுதந்திரக்கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவையும் முஸ்லிம் கவுன்சில் சந்தித்துப் பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் அமைதி முயற்சிகளை நோர்வேயின் புதிய அரசு தொடரும்

## எரிக் சூல் ஹெய்ம் அறிவிப்பு

நோர்வேயில் அமையவுள்ள புதிய அரசு தொடர்ந்தும் அமைதி முயற்சியை மேற்கொள்ளும் என்று வெற்றி பெற்ற கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான எரிக்சூல் ஹெய்ம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச செய்திஸ்தாபனம் ஒன்றுக்கு எரிக் சூல்ஹெய்ம் அளித்த நேர்காணலில், புதிய அரசு ஒக்ரோபர் மத்தியில் அமையும். முறைப்படி சிறிலங்கா அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு தனது அனுசரணையாளர் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வது குறித்துத் தெரி விக்கும்.

இரு தரப்பிலும் எந்த வகையில் நாங்கள் உதவ வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதை செய்யத் தயாராக இருக்கின்றோம்.

அமைதி முயற்சிகளில் எவ்வித மாற்றமும் இருக்காது. தற்போது அமைதி முயற்சிகளுக்குத் தலைமையேற்றிருக்கும் விதார் ஹெல்கேசன் தொடர்ந்தும் அப்பணியை மேற்கொள்வார் என்றார் சூல்ஹெய்ம்.

நோர்வே புதிய அரசு அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் எரிக்சூல்ஹெய்ம் ஆட்சியிலும் பங்கேற்கக் கூடும் என்று கூறப்படுகின்றது.

# ரணில் விக்கிரமசிங்க ஆட்சிபீடம் ஏறுவதையும் நாடு பிளவுறுவதையும் தடுக்க வேண்டும்

## ஜே.வி.பி யின் ஊடக அறிக்கையில் அழைப்பு

(கொழும்பு)

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிடம் எந்தவொரு கொள்கையும் இல்லை. ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டு மக்களை ஏமாற்றி சனாதிபதியாவதற்கு முயற்சிசெய்து வருகின்றா என ஜே.வி.பி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ரணில் விக்கிரமசிங்கவின் கனவு நனவாகாது அக்கனவைக் கலைப்பதற்கு ஜே.வி.பி. முன்னின்று உழைக்கவிருக்கின்றது. சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டுவாராயின் இந்த நாடு பிளவுபடுவது வெகு தொலைவில் இல்லை. நாடு பிளவு படுவதை தடுக்க வேண்டுமாயின் ரணில் ஆட்சி பீடம் ஏறுவதைத் தடுத்தாக வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மிக இரகசியமான முறையில் பேச்சுக்களை நடத்திவருவதாக எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் சனாதிபதியாகி இந்த நாட்டை பங்கு போட்டு விடக்கூடும் என்பதை இந்நாட்டு மக்கள் மறந்துவிடக் கூடாது என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் அமைப்புக்களை மேற்குலகம் தடுக்க வேண்டும்

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கோரிக்கை

மேற்கத்தைய நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்கு உந்துதல் அளிக்கும் வகையில் செயற்படும் அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென சிறிலங்கா அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால கேட்டுள்ளார்.


அமெரிக்க வோஷிங்டனில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மேற்கத்தைய நாடுகளில் செயற்படும் அமைப்புக்களூடாக இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வழங்குகின்ற நிதிகள் காரணமாக இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் சட்டங்களுக்கு புறம்பாக நடந்துகொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டு மேற்கத்தைய நாடுகளில் வாழும் தமிழர்க ளும் சிங்களவர்களும் இலங்கையின் ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் தமது ஒத்துழைப்பை வழங்க முடியுமென அவர் தெரிவித்தார். இலங்கையின் சமாதானமும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் ஆசிய சங்கத்தின் வோஷிங்டனுக்கான நிலையத்தில் இந்தநிகழ்வு நடைபெற்றது.

இலங்கையின் சமாதானத்திற்கு உதவும் நாடுகளின் அக்கறை வியாபித்து செல்கிறது. அத்துடன் யுத்தநிறுத்த நடவடிக்கைகளையும் அந்த நாடுகள் அவதானித்து வருகின்றன.

இந்த நிலையில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் அக்கறை காரணமாக இலங்கையின் சமாதானத் தீர்வுக்கு வழியேற்படும் வாய்ப்பு காணப்படுவதாகவும் தனபால குறிப்பிட்டார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி...




தோற்றம் 28 . 12 . 1964

மறைவு 17 . 08 . 2005

## வரப்பிரகாசம் பாலராசா (செல்வரத்தினம்)

*அப்பா! உமைப்பிரிந்தோம்*
*எனச் சொல்லும் விதியை*
*என்செய்வோம்.*
*உமையெண்ணி ஓர் பொழுதும்*
*தேம்பாமல் நாமில்லை – நிதம்*
*தோறும் உம் நினைவை*
*எதுவும் பிரித்தல் முடியாது.*

*முப்பத்தொரு நாள் சென்றாலும் – நாம்*
*உந்தன் நினைவுத் தடம்*
*மாறாமல் உள்ளோம். உணர்வீர்*
*உங்கள் இனிய முகம் என்றும் எங்களோடு*
*இருக்கும்.*

*குடும்பத்தினர், உறவினர்,*
*7 ஆம் வட்டாரம்,*
*புதுக்குடியிருப்பு,*
*முல்லைத்தீவு*

(6609)

# சாவு அறிவித்தல்

## திரு. இராமன்–பூவிலிங்கம்



155 ஆம் கட்டை கிருஸ்ணபுரம் இல: – 56ஐ சொந்த இடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திரு இராமன் – பூவிலிங்கம் அவர்கள் 13.09.2005 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற இராமன் சின்னம்மா ஆகியோரின் அன்புமகனும் மரியாயின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பிச்சனின் அன்பு மருமக னும், மீனம்மா, ஆறுமுகம், கந்தையா, காலஞ்சென்ற வேலம்மா, துரைச்சாமி, வேலுச்சாமி ஆகியோரின் சகோதரரும், தங்கமுத்து, சிவகாமி, மீனாட்சி, ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் ஜெயராம், சாந்தன், யோகமலர், தேவகி, வாசுகி, சுதர்சன், (போராளி மதியரசன்), சுதன் ஆகியோரின் தந்தையும் மனோகரன், மேரி, விஜயசிறி, வைகுந்தநாதன் சாமிநாதன், கண்ணன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். வனிதா, வரதன், வதனா, தங்கன், வசந்தன், கிசோஜினி, ராவின், ரூபன், பிறிசிலா, உஷா றொபின்சன், நிரோஜன், நிசாந்தன், நிவேதன், நிவேதிகா, கலைக்சன், டிலக்சன், யதுர்சன், விதுர்சன், குஷிசன், தனுசா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 15.09.2005 அன்று இரணைமடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.


*தகவல்: – பிள்ளைகள்,*
*155 ஆம் கட்டை,*
*இல 56– கிருஸ்ணபுரம்,*
*கிளிநொச்சி*

(சி-12851)

# "தேசிய முற்போக்கு திராவிடக்கழகம்" நடிகர்விஜயகாந்த் புதியகட்சி ஆரம்பிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டின் பிரபலதிரைப்பட நடிகர் விஜயகாந்த் அரசியல் கட்சி ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளார். இந்த நிகழ்வுநேற்று மதுரையில் இடம் பெற்றது. இந்த புதிய கட்சிக்கு "தேசிய முற்போக்கு திராவிடக் கழகம்"என்று பெயரிடப்பட்டுள்ளது. தோப்பூரில் நடந்த மாநாட்டில் கட்சியின் கொடியை நடிகர் விஜயகாந்த் ஏற்றி வைத்தார்.



விஜயகாந்த் கட்சிமா நாட்டுக்காகமதுரைதிருநகரில் அமைக்கப்பட்டுள்ளபிரமாண்ட மாநாடு பந்தலை படத்தில் காணலாம்.


## ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
## இ-ரஜித் இங்லிஷ் ------

**புதியபிரிவுகள்ஆரம்பம்:-**

காலை நேர வகுப்பும், தொழில் புரிவோருக்கான இரவு நேர வகுப்பும் ஆரம்பம். பெயர்பதிந்தவர்களும் பெயர்பதிவு செய்பவுள்ளோரும் 16.09.2005 (நாளை) காலை 7.00 மணிக்கு வருகை தரவும்.

பெயர் பதிவுகளுக்கு முந்துங்கள்.

இடம்:- *அரசவைத்தியசாலை அருகாமை, முல்லைவீதி புதுக்குடியிருப்பு.*

(6410)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
### முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

**முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட BAD/B.Com மாணவர்களுக்கான கல்விநடவடிக்கைகள் எதிர்வரும் 19.09.2005 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. மாணவர்கள் துறைத் தலைவர்களைச் சந்திக்கும் படி கேட்டுக் கொள் ளப்படுகின்றனர்.**

**பதிவாளர்.**

(சி.12852)



**Save the Children**
**in Sri Lanka**

## மீன்பிடிக் கட்டுமரங்கள் வழங்குவதற்கான கேள்வி கோரல்

**சுனாமியால பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் மீன்பிடிப் பாவனைக்கு உகந்த 6Kok(9')இ 7முழம்(101/2'), 8முழம் (12'), ஆகிய அளவுகளுடைய கட்டு மரங்களிற்கு கட்டுமரவழங் குனர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படு கின்றன.**

### நிபந்தனைகள்:-

01) ஒவ்வொரு வகைக்குமான விலை குறிப்பிடப்படல் வேண்டும்.
02) ஒருமாத காலப்பகுதிக்கு வழங்கக்கூடிய கட்டுமரங்களின் எண்ணிக்கை.
03) மூடிய தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.
04) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கட்டுமரங்களிற்கான கேள்வி கோரல் என இடப்படல் வேண்டும்.
05) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத்திகதி:- 22.09.2005

மேலதிக விபரங்களுக்கு:-
நிர்வாக அலுவலர்இ
சிறுவர் பாதுகாப்பு நிறுவனம்இ
142இகண்டிவீதிஇ
கிளிநொச்சி. (சி.12819)

தொலை பேசி 0212285797
தொலை நகல் 0212285983


# இந்தியப்பிரதமர்-அமெரிக்கசனாதிபதி நியூயோர்க்கில் சந்தித்து பேச்சு

(வோஷிங்டன்)

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை நேற்று நியூயோர்க்கில் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அணுசக்தியை ஆக்க பூர்வமான வழிகளில் பயன்படுத்துவதில் இரு நாடுகளும் ஒத்துழைத்து செயற் படுவது என்று கடந்த யூலைமாதம் இரு தலைவர்களும் உடன்பாட்டில் கையெழுத்திட்ட பின்னர் நடை பெறும் முதல் சந்திப்பு இதுவாகும்.

அணுவாயுத பரவல் உடன்பாடு, ஈரான் அணுவாயுதம் தயாரிப்பதன் பின்னணியில் எழுந்துள்ள நிலை மைகள் ஆகியவை தொடர்பாக இரு நாட்டு தலைவர்களும் விவாதித்தனர்.

அணுவாயுத தயாரிப்பை ஈரான் கைவிட்டு ஆக்கபூர்வமான வழிகளில் அணுசக்தியை பயன்படுத்த நட்பு நாடான இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று அமெரிக்க சனா திபதி புஷ் இந்தியப் பிரதமரிடம் கேட்டுள்ளார்.

ஐ.நா.பொதுச் சபை சீர்திருத்தம் தொடர்பாகவும் இதர சர்வதேச விவ காரங்கள் தொடர்பாகவும் இருநாட்டு தலைவர்களும் விவாதித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள இந்தியப் பிரதமர் பாகிஸ்தான் அதிபர் முஷாரப், ரஷ்ய அதிபர் புட்டின், சீனத்தலைவர் ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

# வாஜ்பாயுடன் அத்வானி நேரில் சந்தித்துப் பேச்சு

(புதுடில்லி)

வாஜ்பாயுடன் அத்வானி நேரில் சந்தித்து சென்னையில் நடைபெறும் தேசிய செயற்குழு பற்றி ஆலோசனை நடத்தியுள்ளார்.

பாரதிய ஜனதாவின் மூத்த தலை வர்களான வாஜ்பாய் -அத்வானி இடையே மதன்லால் குரானா பிரச் சினையில் மோதல் ஏற்பட்டது. குரானா விளக்கம் அளிக்க போதிய அவகாசம் அளிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று மூத்த தலை வரும்,முன்னாள் பிரதமருமான வாஜ்பாய் கருத்து தெரிவித்தார். இதைத் தொடர்ந்து குரானா அளித்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, அவரை மீண்டும் கட்சியில் அத்வானி சேர்த்து இருக்கிறார்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் வாஜ்பாயை சந்திக்க அவரது இல்லத்துக்கு அத்வானி சென்றார். அங்கு இருவரும் நீண்ட நேரம் பேசினார்கள். சென்னையில் நடை பெற இருக்கும் பாரதிய ஜனதா தேசிய செயற்குழுக் கூட்டம் பற்றி இருவரும் விவாதித்தனர். பீகார் தேர்தல்,அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் மாநில தேர்தல்கள் தீவிர வாத பிரச்சினை, கட்சி பிரச்சி னைகளை பற்றி அவர்கள் பேச்சு நடத்தினார்கள்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஊழல்கள், மக்கள் விரோதப் போக்குப்பற்றி சென்னையில் செயற் குழுக் கூட்டத்தில் விவாதிக்கவும் முடிவு செய்தனர்.

# குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்

(சென்னை)

சென்னையின் குடிநீர் தட்டுப் பாட்டை போக்க கடல்நீரை குடி நீராக்கும் திட்டம் செயற்படுத்தப் படுவது தொடர்பாக ஒப்பந்தம் சென் னையில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தப்படி சென்னை பெருநகர குடிநீர் வாரியம் மீஞ்சூரில் கடல் நீரை குடிநீராக சுத்திகரிக்கும் ஆலை அமைக்க 60 ஏக்கர் நிலம் வழங்கும். இந்த ஆலையில் தினம் பத்து கோடி லீற்றர் கடல் நீர் குடி நீராக்கப்படும். இந்த பணியில் ஈடு படும் ஐதராபாத் நிறுவனத்துக்கு ஸ்பெயின் நாட்டு 'பெபிசா கன்ஸ்ட் ரக்ஷன்' நிறுவனம் தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்.

# பீகாரில் லல்லுபிரசாத் முதல்வராக வரமாட்டார் -காங்கிரஸ்

(புதுடில்லி)

பீகாரில் லல்லு-காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றால் லல்லு பிரசாத் முதல்வர் ஆகமாட்டார் என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

பீகாரில் கடந்த சட்டசபைத் தேர் தலுக்கு முன், மத்திய ரெயில்வே அமைச்சர் லல்லு பிரசாத்தின் மனைவி ரப்ரி தேவி முதல்வராக இருநதார்.

கடந்த சட்டசபைத் தேர் தலுக்கு லல்லு பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதாதளம் தலைமையிலான கூட் டணிக்கு பெரும்பான்மை கிடைத் தால் மீண்டும் ரப்ரி தேவிதான் முதல்வர் என்று லல்லு கூறினார். ஆனால் அவரது கூட்டணிக்கு பெரும் பான்மை கிடைக்கவில்லை நடக்க இருக்கும் பீகார் சட்டசபைத் தேர் தலிலும் தனது கட்சி தலை மையிலான கூட்டணியில் வெற்றி பெற்றால் ரப்ரி தேவிதான் முதல்வர் ஆவார் என்று லல்லு பேசி வந்தார்.

இந்த நிலையில் லல்லு பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சி தலைமையிலான கூட்டணியில் சேர காங்கிரஸ்,தேசியவாத காங் கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்ட்டு, ஆகியகட்சிகள் நிபந்தனை விதித் தன.

தேர்தலுக்கு முன்பே முதல்வர் யார் என்பதை அறிவிக்கக் கூடாது. தேர்தலில் கூட்டணிக்கு பெரும் பான்மை கிடைத்த பிறகு முதல் வரை முடிவுசெய்யலாம்என்று நிபந் தனை விதிக்கப்பட்டது.

அந்த நிபந்தனையை' லல்லு' ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து இந்த நான்கு, கட்சி கூட்டணி உருவாகியுள்ளது.

# மூன்று தீவிரவாதிகள் ஜம்முவில் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

ஜம்புகாஷ்மீரின் பூஞ்மாவட்டத்தில் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப்பகுதியில் இந்திய இராணுவத்தினரால் மூன்று பாகிஸ்தானிய தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. தமது பகுதிகளில் ஊடுருவமுயன்ற தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதிலேயே இவர்கள் பலியானதாக இந்திய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மூன்று துப்பாக்கிகள் மூன்று தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் வெடி பொருட்கள் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் கைதிகள் விடுதலை

(புதுடில்லி)

இந்தியாவும்-பாகிஸ்தானும் பரஸ்பரம் கைதிகளை விடுதலை செய்துள்ளன.

பாகிஸ்தான் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 371 மீனவர்கள் உட்பட 435 இந்தியர்களை அந்நாட்டு அரசு விடுவித்துள்ளதை யடுத்து அவர்கள் இந்தியாவிற்குள் வந்துள்ளனர்.

எல்லையில் குழுமியிருந்த அவர்களது உறவினர்களும் இந்திய அதிகாரிகளும் அவர்களை வர வேற்றனர்.

இதேபோல், இந்தியச் சிறைகளில் இருந்த 152 பாகிஸ்தானியர்கள் விடுதலை செய்யப்பட்டு பாகிஸ் தானுக்கு அனுப்பப்பட்டனர்.

அவர்களது உறவினர்களும் பாகிஸ்தான் அதிகாரிகளும் விடு தலை செய்யப்பட்டவர்கள் அழைத்துச் சென்றனர். இதற்கான நிகழ்ச்சி வாகா எல்லையில் இடம் பெற்றது. இந்தியா, பாகிஸ்தான் இடையிலான அமைதிப் பேச்சுக் களின் பயனாக இரு நாடுகளிலும் சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர் சிலரையும் விடுவிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் சிறைக் கைதிகளை விடுதலை செய்துள்ளன.

இதனிடையே பாகிஸ்தான் கராச்சி கடற்பகுதியில் மீன்பிடித்த தாகக் கூறி 24 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அதிகாரிகள் பிடித்துச்சென்றுள் ளனர். அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

# சிறிலங்கா—பங்களாதேஷ் 1ஆவது டெஸ்ட் சிறிலங்கா இலகு வெற்றி!



சிறிலங்கா- பங்களாதேஷ் அணிகள் பங்கு பற்றிய முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணி ஒரு இனிங்ஸ் 96 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை வென்றுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா பங்களாதேஷை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதன்படி முதலில் களமிறங்கிய அவ்வணி ஆரம்பத்தில் நல்லஅடித்தளத்தையிட்ட போதும் அணித்தலைவர் ஹபிபுல்பஸாரின் விக்கெட்டையிழந்ததும் 188 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. 154 ஓட்டங்களைப் பெற்று இரண்டு விக்கெட்டுக்களை மட்டுமிழந்த அவ்வணி றங்கன கேரத், முரளிதரன் ஆகியோரின் சுழலில் ஏனைய எட்டு விக்கெட்டுக்களையும் சொற்ப ஓட்டங்களுக்குள் இழந்தது.

பங்களாதேஷ் அணியில் பஸார் 84 ஓட்டங்களையும் ஓமர் 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்துவீச்சில் ஹேரத், முரளிதரன் முறையே நான்கு, மூன்று என்ற எண்ணிக்கையில் விக்கெட்டுக்களைப் பெற்றனர்.பதிலுக்கு ஆடிய சிறிலங்கா தனது முதல் இனிங்சில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 370 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

அவ்வணியின் தில்சான் 86 ஓட்டங்களையும் சமரவீர, மகேல ஜெயவர்த்தன, சங்கக்கார, ஜெயசூரிய ஆகியோர் முறையே, 78, 63, 30 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர். அணித்தலைவர் அத்தப்பத்து 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் பங்களாதேஷின் ரபீக் ஐந்து விக்கெட்டுக்களையும், ரசல், ஹொசைன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

பின்னர் தனது இரண்டாவது இனிங்சை நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்த பங்களாதேஷ் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் மூன்று விக்கெட்டுக்களையிழந்து33 ஓட்டங்களைப் பெற்றது. நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்த பங்களாதேஷ் அணி முரளிதரனினதும் மாலிங்கவினதும் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாது. 53 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. அவ்வணியின் வீரர்கள் எவராலும் 15 ஓட்டங்களுக்குமேல் பெறமுடியவில்லை.



இரண்டாவது இனிங்சில் முரளிதரன் 18 ஓட்டங்களுக்கு ஆறுவிக்கெட்டுக்களையும்,மாலிங்க மூன்று வாஸ் ஒன்று என விக்கெட்டுக்களை வீழ்த்தினர். டெஸ்ட் போட்டிகளில் 47ஆவது முறையாக ஒரு இனிங்சில் ஐந்து விக்கெட்டுக்களைப் பெற்ற முரளிதரன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## சீன ஓபன் டெனிஸ் போட்டி; முதல் சுற்றில் நல்பாண்டியன் வெற்றி!

சீன ஓபன் டெனிஸ் போட்டியில் டேவிட் நல்பாண்டியன் அபார வெற்றி பெற்றார்.

சீன ஓபன் டெனிஸ் போட்டி நேற்று பீஜிங் நகரில் தொடங்கியது. ஆரம்பத்தில் இரண்டு மணி நேரம் மழை பெய்ததால் ஆட்டம் காலதாமதமானது. முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ஆர்ஜென்டினா வீரர் டேவிட் நல்பாண்டியன் அபார வெற்றி பெற்றார். அவர் டென்மார்க் வீரர் கிறிஸ்டியானை 6-3, 7-6 என்ற செட் கணக்கில் வென்றார்.

இன்னொரு ஆட்டத்தில் முன்னாள் அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் தாமஸ் ஜோகன்சன் 6-4,6-3 என்ற செட் கணக்கில் சுவீடன் நாட்டு வீரர் ஜோனஸ் ஜோர்க் மேனை தோற் கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.




## சிம்பாப்வே முக்கோணத் தொடரில் ஆட்ட நிர்ணய சதியில் இந். வீரர்கள்?

சுமார் இரு வாரங்களுக்கு முன்பு சிம்பாப்வேயில் நடைபெற்ற நியூசிலாந்து. இந்திய சிம்பாப்வே அணிகள் பங்குபற்றிய வீடியோகோன் கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடரின்போது இந்திய வீரர்கள் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

மும்பை அழகியான தாருண்னுமகானின் சொத்துக் குவிப்பு தொடர்பில் இந்திய வருமான வரித்துறையினர் விசாரணை நடத்திய போது அவரிடம் இருந்த தகவல்படி மேற்படி சந்தேகம் எழுந்துள்ளது.அதன்படி மேற்படி அழகிக்கும் ஆட்டசதி நிர்ணயக் காரர்களுக்கும் இடையே தொடர்பு இருந்தமை அறியவந்துள்ளது.

கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற நியூசிலாந்துடனான இறுதிப் போட்டியில் முதல் 25 ஓவர்களில் வீரர்கள் சிறப்பாக ஆடியதும் அடுத்த 25 ஓவர்களில் மோசமாக ஆடியதும் மேற்படி சந்தேகத்துக்கு வலுவூட்டுவதாக இருப்பதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில்,சர்வதேச கிரிக்கெட்சபை அதிகாரிகள் சிலர் டில்லி வந்திருப்பதாகவும் அவர்கள் இந்திய புலனாய்வுத்துறையினரைச் சந்தித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிம்பாப்வே— இந்தியா முதல் டெஸ்ட்; இந்தியா வலுவான நிலையில்



சிம்பாப்வேயில்நடைபெற்று வரும் இந்தியா-சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் முதலாவது இனிங்சில் இந்தியா மூன்று விக்கெட் இழப்பிற்கு 323 என்ற வலுவான நிலையை எட்டியுள்ளது.

நேற்று முன்தினம் ஏழு விக்கெட்டுக்களுக்கு 265 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த சிம்பாப்வே அணி நேற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. சிம்பாப்வே அணித்தலைவர் தைபு 71 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில், பதான் ஐந்து விக்கெட்டுக்களையும் சஹீர்கான் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து ஆடிய இந்திய அணி மூன்று விக்கெட் இழப்பிற்கு 323 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்ஷ்மன் ஆட்டமிழக்காது 123 ஓட்டங்களைப் பெற்றார். ராவிட் 77 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கங்குலி 23 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காது உள்ளார்.



## ஆஷஸ் டெஸ்ட் தொடர்வெற்றி லண்டன் நகரம் விழாக்கோலம்

சுமார் 18 வருடங்களின் பின்னர் வரலாற்றுப் புகழ்மிக்க ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்து அணி கைப்பற்றியதையடுத்து லண்டன் நகரம் விழாக்கோலம் பூண்டதாகவும் அதனை மக்கள் தேசிய விழாவாகக் கொண்டாடினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து வீரர்கள் திறந்த வாகனம் ஒன்றில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட தாகவும் மக்கள் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்ததாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை மகாராணி இரண்டாம் எலிசபெத், பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோர் அவர்களுக்குக் கடிதம் மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சானியா மிர்சா அதிர்ச்சித்தோல்வி



பாலியில் நடைபெற்றுவரும் ஸ் மிலாக் சா் வதேச டெனிஸ் போட்டியில் இந்திய டெனிஸ் வீராங்கனையான சானியா மிர்சா அதிர்ச்சித் தோல்வியடைந்தார். இதன் முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா,ரஷ்ய வீராங்கனை எகதொரினாவை எதிர்த்து ஆடினா

இதில் சானியா வெற்றி பெறுவார் என்று [illegible] பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக தொடக்கம் முதலே பதட்டமாக ஆடிய சானியா மிர்சா இதில் 3-6,2-6 என்ற நேர்செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

## இறுதிப் போட்டியில் தொடர் தோல்வி என்னால் ஊகிக்க முடியவில்லை

இந்திய கிரிக்கெட் வீரர்கள், தலைசிறந்த சாதனையாளர்கள் சர்வதேச அரங்கில் நிறைய சாதித்தவர்கள் ஆனாலும், இறுதிப்போட்டிகளில் அவர்கள் வரிசையாகத் தோற்பதன் காரணம் என்னவென்று என்னால் ஊகிக்க முடியவில்லை. எது எப்படியோ அவர்களது இறுதிப்போட்டி அலர்ஜியைப் பயன்படுத்தி, கோப்பையுடன் நாடு திரும்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார். நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங்.


ஒருநாள் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை, சாதாரண லீக் போட்டிகளில் விளையாடுவது வேறு,இறுதிப்போட்டிகளில் விளையாடுவது. என்பது வேறு இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது நிறைய இறுதிப்போட்டிகளில் தோற்றிருப்பதால், இயல்பாகவே இந்திய வீரர்களை ஒரு நெருக்கடி சூழ்ந்து விடுகிறது.

இந்த இறுதிப்போட்டியிலாவது வெல்வார்களா என்று இந்திய அணி ரசிகர்களும், செய்தி நிறுவனங்களும் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள் இந்த எதிர்பார்ப்பே வீரர்களுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தி, மீண்டும் ஒருஏமாற்றத்துக்கு அடிபோட்டு விடுகிறது.

இந்திய அணி பயிற்சியாளராக ஜோன்ரைட் பொறுப்பேற்ற பின் அந்த அணியை பிரமாதமாக மாற்றிக்காட்டினார். ஆனாலும், இந்த இறுதிப்போட்டி அலர்ஜியை அவரால் போக்க முடியவில்லை. புது பயிற்சியாளர் கிரேக் சப்பல் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, இந்திய அணியைப் பிரகாசிக்கச் செய்வார் என்று நம்புகிறேன் என்கிறார். பிளெமிங்.

## தோல்வியில் துவண்டு அணியில் மாற்றம் செய்யக் கூடாது

**முன்னாள் அவுஸ். அணித்தலைவர் ஸ்ரீவோ**




ஆஷஸ் கிண்ணத்தையிழந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித்தலைவர் தனது வீரர்களுடன் நேற்று முன்தினம் நாடுதிரும்பியுள்ளார்.

இந்தத் தோல்வி பற்றி கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவோ அவுஸ்திரேலிய அணி இன்னும் பலமான அணியாகவே இருப்பதாகவும் திடீர் முடிவுகளை மேற்கொண்டு அணியில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடாது என்றும் எங்கு தவறு நடந்தது என்பதைக் கவனித்து அதனைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இரண்டு முறை ஆஷஸ் கிண்ணத்தை வென்ற வோ மேலும் தெரிவிக்கும் போது இந்தத் தொடர் அவர்களுக்கு ஏமாற்றம் அளித்த போதும் வீரர்கள் அனுபவமிக்கவர்களாகவே இருப்பதாகவும் இந்த இழப்பிலிருந்து அவர்களால் மீள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்வாளர் டேவிட் பூன் கூறும் போது, இதனால் யாரையும் ஓய்வில் செல்ல விடக்கூடாது என்றதுடன் நன்கு வளர்ச்சி பெற்ற வீரர்களை இந்த அணியில் உறுதிப்படுத்தப்படாததை ஏற்றுக்கொண்டுள்ளார். இது தமக்கு ஒரு எச்சரிக்கை என தெரிவித்துள்ள அவர், நல்ல அணி ஒன்றை உருவாக்குவது சிறந்த வீரர்களைத் தெரிவு செய்வது அவசியம் என்றார்.

## சிந்தனைக்கு



எதிரி ஈவிரக்கமற்றவன், போர்வெறி கொண்டவன்; எமது தாயகத்தைச் சிதைத்து, எமது இனத்தை அழித்து விடுவதையே இலட்சியமாகக் கொண்டவன் அவனது இதயக்கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## நட்புக்காகவாயினும்...!

நான் யுத்தத்தை வெறுக்கின்றேன், யுத்தமனோநிலையும் என்னிடம் கிடையாது எனக் கூறும் சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் அவற்றின் இக்கூற்றுக்கு ஏற்றவையாக இல்லை. நாட்டை எவ்வளவு விரைவில் யுத்தத்திற்கு இட்டுச் செல்ல முடியுமோ அந்தளவிற்கு விரைவில் இட்டுச் செல்லக்கூடியதாகவே அவரின் நடவடிக்கைகள் உள்ளன.

சனாதிபதித் தேர்தலின் வெற்றிக்காக பிரதமர் மகிந்தராஜபக்ஷ இரு கட்சிகளுடன் உடன்பாடு செய்துகொண்டுள்ளார். இவை இனப்பிரச்சினை தொடர்பான இன்றைய அரசியல் யதார்த்தத்தையே மாற்றியமைக்கத்தக்கதான அன்றி மாற்றி அமைக்க வேண்டியதான நிலையைத் தோற்றுவிக்கத்தக்க உடன்பாடுகள் என்று கூறுதலே பொருத்தப்பாடானதாக இருக்கும்.

இருபது ஆண்டுகள் கடுமையான யுத்தத்தின் பின்னர், யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றின் பிரகாரம் கடந்த மூன்றரை ஆண்டுகளாக ஓரளவு அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்று. இவ்அமைதி நிலை நீடிப்பதற்கு யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கமும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்று மூலம் வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக அலகொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதும், இறுதித் தீர்வாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையிலான அரசியற்தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்என்பதும் யதார்த்தத்தின் பாற்பட்டதான முடிவாக சர்வதேச அரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகவுள்ளது.

இவை சிறிலங்காவை ஆண்ட ஆட்சியாளர்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ளப்பட்டவையும் அல்ல. இராணுவ ஆக்கிரமிப்பு, அரச பயங்கரவாதம் என்பவற்றால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறை வெற்றிகாணாத நிலையில் இராணுவ ரீதியில் வெற்றிகொள்ள முடியாத நிலையில் இயலாமை காரணமாகவும், வற்புறுத்தல் காரணமாகவும் மேற்கொண்ட தீர்மானங்களே அவையாகும்.

ஆனால், புதிதாக சனாதிபதி பதவிக்குப் போட்டியிடவுள்ள மகிந்தராஜபக்ஷ அவர்கள், யுத்தத்தை வெறுப்பதாகக் கூறுபவராக இருப்பினும் முற்கூறப்பட்ட சமாதானத்திற்கானதும், அமைதிக்கானதுமான அடிப்படைகளைத் தகர்ப்பவராகவும், சமாதானத்திற்கும், அமைதிக்கும் விரோதமான செயற்பாடுகளைக் கொண்டவர்களுடன் பலமாகக் கூட்டுக்களை அமைத்துக் கொண்டுள்ளதோடு, அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்பவராகவும் உள்ளார்.

ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் மகிந்த ராஜபக்க்ஷ செய்துகொண்டுள்ள உடன்பாடுகள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கான அடித்தளத்தைத் தகர்ப்பதாகவுள்ளது. அதாவது ஜே.வி.பியுடனான உடன்பாட்டில் காணப்படும் ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு என்பதும், ஜாதிகஹெலஉறுமயவுடனான உடன்பாட்டில் காணப்படும், தமிழரின் தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி போன்றவை நிராகரிக்கப்படுகின்றமையுமானது நிரந்தர தீர்வுக்கான அடிப்படைகளை இல்லாது ஒழித்துவிடுபவையாகவேயுள்ளன.

இதேசமயம், இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை நிராகரிப்பு, பொதுக்கட்டமைப்பு நிராகரிப்பு போன்ற விடயங்கள் நிரந்தர அரசியற் தீர்வு முயற்சிகளுக்கு முன்னதான தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அத்தியாவசிய, மனிதாபிமான தேவைகளைப் புறக்கணிப்பவையாகவேயுள்ளன. அதாவது தமிழ் மக்களுக்கான நிவாரணப்பணிகள் புறக்கணிக்கப்படுபவையாகவுள்ளன.

அடுத்ததாக யுத்தநிறுத்த உடன்பாட்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் என்பது தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றி சிறிலங்கா ஆயுதப்படைகளின் எதேச்சதிகாரமான செயற்பாட்டிற்கு ஏற்றவகையிலான உடன்பாட்டை மேற்கொள்ளுதல் என்பதாகும்.

இந்நவகையில், மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெலஉறுமயவுடனும் செய்துகொண்டுள்ள உடன்பாடுகள், இனப்பிரச்சினை தொடர்பான நிரந்தர, தற்காலிக தீர்வுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாகவுள்ள அதேவேளை, அமுலிலுள்ள யுத்த நிறுத்தத்தைப் பாதுகாப்பதற்கானவையாகவும் இல்லை. அதாவது இனப்பிரச்சினைத் தீர்விற்கான வழிவகைகளை தடைசெய்பவையாகவும், தீர்வு முயற்சிகளை முடக்குபவையாகவுமே உள்ளன.

இந்த நிலையில்,அதாவது தீர்வுகளுக்கான அடிப்படைகளை நிராகரித்தும் யுத்தநிறுத்த உடன்பாட்டை பலவீனப்படுத்தும் வகையிலும் நடந்துகொள்ளும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ "நான் யுத்தத்தை விரும்பவில்லை. அதை வெறுக்கிறேன" எனக் கூறுவதில் அர்த்தம் எதுவும் இல்லை. அதற்கும் அப்பால் அவர் கூறுவது போன்று யுத்தத்தை வெறுப்பவராகவே இருப்பினும்கூட, அவரின் நண்பர்கள் அவ்வாறில்லை. அவர்கள் யுத்தத்தை யாசிப்பவர்களாகவும், அதன் மீது விருப்புக் கொண்டவர்களாகவுமே உள்ளனர். ஆகையினால், தேர்தலில் வென்றால் தோள்கொடுக்கும் நண்பர்களுக்காக மகிந்தராஜபக்ஷ யுத்தத்தை விரைந்து நடத்த வேண்டியதாகவே இருக்கும்.

# மன்னவனே உன்னை மறக்காமல் நினைக்கிறோம்



ஈழத்து மண்ணில்
இந்தியத்து கொடும் கால்கள்
வஞ்சகமாய் வந்திறங்கி
வதை செய்த அன்றோர்நாள்
விஞ்சிய வீரம் கொண்ட
விடுதலைப்புலி திலீபன் - தன்
வயிற்றிலே போர் தொடுத்து
வஞ்சகத்தை புரியவைத்தான்

வீரத்தின் கதை சொல்லி
விடைபெற்ற ஈழப்போர்
அகிம்சையின் வடிவம்பெற்று
அனல் நெருப்பாய் தொடர்ந்ததன்று
சூழ்ச்சிவலை வீசி - எமை
ஆட்சி செய்ய வந்தவரை
வீழ்த்தி விடிவு காண - தனை
ஈய்ந்தான் எம் திலீபன்

மக்கள் புரட்சி வெடிக்கின்ற
மண்ணில் நாம் நின்று
மன்னவனே உன்னை
மறக்காமல் நினைக்கின்றோம்

உன் எண்ணம் நிறைவேறும்
உரிமைப்போர் உன்பெயர் சொல்லும்
வல்ல புலி வீரம்
சொல்லி நிற்கும் உன்தியாகம்.

- முத்தையனூர் துஷ்யந்தன்

# தமிழீழம்தான் இறுதித் தீர்வென தமிழர்கள் அணிதிரண்டுள்ளனர்

## முல்லை. எழுச்சி நிகழ்வில் அரியநேத்திரன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ் மக்கள் அனைவரும் அணி திரண்டு தமிழீழம்தான் இறுதித் தீர்வென உறுதியாக நிற்கிறார்கள்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

நேற்று புதுக்குடியிருப்பில் நடைபெற்ற முல்லை. மாவட்ட தமிழ் தேசிய எழுச்சி நாள் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக பல்வேறு பகுதிகளிலும் பிரகடனங்கள் நடை பெற்று வருகின்றன. அந்த வகையில் நான்காவது பிரகடனமாக இங்கு நடைபெறும் பிரகடனமும் அமைகின்றது.

வவுனியாவிலே நடைபெற்ற பிரகடனத்திற்கு முன்பு தந்தை செல்வா அவர்கள் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையிலே தமிழீழம் தான் தமிழரின் தீர்வே என்கின்ற ஒரு பிரகடனத்தை செய்திருந்தார். அவர் அந்தப் பிரகடனத்தை செய்கின்ற போது வெறுங்கையுடனேயே அந்தப் பிரகடனத்தை செய்திருந்தார்.

அந்தப் பிரகடனத்தை செய்த பின்பு தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறிவிட்டு அவர் மறைந்து விட்டார்.

அந்தக் காலத்தில் தான் தமிழர்கள் அனைவரும் ஒரு தலைவனின் வரவுக்காக காத்திருந்தோம். 1977 ஆம் ஆண்டு அந்தக் காலப்பகுதியில் தான் இந்தத்தலைவர் பிறந்தார். அந்தக் காலத்தில்தான் தமிழன் போரிட வேண்டும் மென்ற உணர்வை வெளிப்படுத்தி கவிஞர் காசிஆனந்தன் கவிதை ஒன்றையெழுதியிருந்தார் தந்தை செல்வா வெறுங்கையுடன் செய்த பிரகடனத்திற்கு கவிஞர் காசிஆனந்தன் வெள்ளைத் தாழில் எழுதிய கவிதைக்கும் இலக்கணம் வகுத்தவாறு பிறந்தவர்தான் எமது தேசியத்தலைவர். அவற்றின் பிற்பாடுதான் இந்தப் போராட்டம் முனைப்புப் பெற்றது.

மட்டக்களப்பிலே, அம்பாறையிலே இன்று என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதென்பதை உலகம் அறிய வேண்டும். அங்கு இராணுவ ஆக்கிரமிப்புக்களின் மத்தியில்தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று கிழக்கை பிரிக்க வேண்டுமென்று பல அரசியல்வாதிகள் கூறுகின்றார்கள். அங்கிருக்கின்ற மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த தீர்வும் எமது தேசியத் தலைவரின் பின் அணிதிரண்டு தமிழீழம்தான் தீர்வு என உறுதியாக வெளிப்படுத்தி நிற்கிறார்கள்.

ஆகவே நாங்கள் இங்கு செய்கின்ற இந்த எழுச்சிப் பிரகடனங்களை சர்வதேசம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரகடனங்கள் நிச்சயமாக சிறிலங்கா அரசாங்கங்களின் மனச்சாட்சியை தட்டுமா என்ற கேள்வி எமது அனைவரின் மனங்களிலும் இருக்கின்றது.

நிச்சயமாக அவர்களின் மனச்சாட்சியை தட்டமாட்டாது ஏனென்றால் 52 வருடகாலமாக நாங்கள் ஏமாற்றப்பட்டோம், ஏமாந்துவிட்டோம். ஆனால் ஒன்று இனி வரும் காலத்தில் நாங்கள் ஏமாற்றப்படமாட்டோம். வரும் 2006 ஆம் ஆண்டு ஏற்படுகின்ற மாற்றம் நிச்சயமாக தமிழீழ மக்களிற்கான, தமிழீழத்துக்கான மாற்றமாக இருக்கும். அந்த மாற்றத்திற்கான அறைகூவலை எமது தேசியத் தலைவர் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி வெளியிடுவார். அந்தச் செய்தியுடன் நாங்கள் அவரை பின் தொடர்ந்து செல்லத் தயாராகுவோம் என்றார்.

## சர்வதேசமே...

அனுபவித்து வரும் இன்னல்கள் சொல்லிலும், எண்ணிலும் அடங்காதவை. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள பேரினவாதத்தின் அடிமைகளாகக் கருதப்பட்டு அடக்குமுறைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளோம். இதுவரையான ஒப்பந்தங்கள், பிரகடனங்கள் கிழித்தெறியப்பட்டு காற்றோடு காற்றாகி விட்டன. புரிந்துணர்வு உடன்பாடு கேலிக்கூத்தாகி முறிவடையும் அபாய நிலைக்கு வந்துவிட்டது. ஆழிப்பேரலை அழிவுக்குள்ளான எமது மக்களுக்கு உதவுமென எதிர்பார்த்த பொதுக்கட்டமைப்பு சிங்கள உயர்நீதிமன்றத்தால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த கொடூரங்களின் பின்பு தான் எங்களின் உணர்வுகளை ஒன்று கூட்டி வவுனியாவில் பிரகடனமாக தந்தோம். அதற்கு முல்லை. வாழ் பல்லாயிரம் மக்கள் ஒன்று சேர்ந்து வலுச் சேர்க்கின்றோமென்பதை மிகத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இன்று மீண்டும் அவசரகால தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மககள் கைதுக்கும் வதைக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுகின்றது. சிங்கள அரசு, தேச விரோத கும்பலைக் கொண்டு எமது மக்களையும் போராளிகளையும் கொன்று குவிக்கின்றது. நாம் வாழ்ந்த தேசங்களை பாதுகாப்பு வலயங்களாக்கி விவசாய நிலங்களையும், மக்கள் குடியிருப்புக்களையும் அரச படைகள் நாசம் செய்து வருகின்றன. நமது சொந்தக் கடற்பரப்பில் மீன் பிடித்துச் சீவனோபாயம் செய்து வருகின்ற மக்கள் மீது கடற்படையினர் இனவாத வக்கிரகங்களை தீர்க்கின்றார்கள். இத்தனையும் எங்கள் விடுதலைப்புலிகளின் கைகளை சமாதானமென்ற மாயக்கயிற்றால் கட்டிய பின்பே நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கவிடயமாகும். சமாதானத்திற்கு வழிகொடுத்த சர்வதேசம் இந்த அரச பயங்கரவாதிகளை பார்த்தும் மௌனியாக இருப்பதில் நியாயமில்லை. சர்வதேச ஆலோசனைகளுக்கு செவிமடுத்து நிற்கும் எம்மக்கள் மீது தொடர்ந்து அத்துமீறும் அரசபடைகளின் அச்சுறுத்தலுக்கு தடைவிதிக்க வேண்டிய பொறுப்பு உங்களிடம் உண்டு என்பதுடன் சிங்கள அரசின் நடவடிக்கைகளை நிறுத்தவும் உங்களால் முடியுமென பூரணமாக நம்புகின்றோம்.

சர்வதேசமே! இவ்வாறான எங்கள் வவுனியாப் பிரகடனத்துக்கும் அதற்கு வலுக்கொடுக்கும் மாவட்ட குரல்களுக்கும் நீதி சொல்லநீங்கள் தவறுவீர்களானால் எங்கள் தேசத்தலைவனுக்கு சில உறுதியான செய்திகளை முல்லை. மாவட்டம் நிமிர்ந்து நின்று இந்த நாளில் சொல்லி வைக்க விரும்புகிறது.

மேதகு தேசியத்தலைவர் அவர்களே!

☐ உங்களின் எண்ணங்கள் எதுவானாலும் எங்களின் கரமும் செயலும் அதற்கு உரம் கொடுக்கும்.

உச்சிமீது வான்இடிந்து வீழ்ந்தாலும் அச்சமின்றி தலைகொடுக்கும். உங்கள் பின்னால் நாம் உறுதியுடன் நிற்போம்.

☐ அநீதியை திட்டமிட்டு செய்யும் சிங்கள இனவாதத்திற்கு முன்னால் உங்களை வருத்தி மௌனியாக்கும் உலகத்தின் மாயையினை கிழித்தெறிவதற்கு எங்கள் கூட்டுப்பலம் இன்றே கிடைக்கிறது.

இத்தனையையும் மீறி சிங்கள அரசு போரைத்திணிக்குமானால் எங்களின் உரிமையைப்பெற தமிழ்பேசும் மக்களின் ஒவ்வொரு உயிரையும் ஆயுதமாக்க துணிந்துவிட்டோம் என்று கூறி முல்லை.மாவட்டத்தின் எழுச்சிக் குரலை உரத்துச் சொல்கின்றோம்.

"தடுமாறும் பேச்சினால் பயனேது மில்லை
தமிழீழமே எங்கள் மூச்சு" என்று குறிப்பிட்டுள்ளது.

## தியாக..

சந்திகள், வீடுகள் என்பனவற்றில் பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு நினைவு கூரல் நிகழ்வுகள் நடைபெறும்.

கடைசி மூன்று நாட்களும் பிரதேச ரீதியாக முக்கிய இடங்களில் பந்தலிட்டு காலை 8.00 மணியிலிருந்து 4.30மணிவரை அடையாள உண்ணா விரதமும் நடைபெறும்.

கடைசி நாளான 26 ஆம் திகதி காலை 10.48 மணிக்கு மணி ஒலிக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெறும். அன்று மாலை 7.00 மணிக்கு பிரதேசத்திற்கு ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடை பெற ஏற்பாடுகள் செய் [illegible] ன்றன.

# தமிழ்ச்செல்வன் - கூட்டமைப்பினர் சந்திப்பில் மூன்று முக்கிய விடயங்கள் ஆராய்வு

## - பா. உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தகவல்



அரசியல்துறைப்பொறுப்பாளர் -தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையில் நேற்று இடம் பெற்ற சந்திப்பில்...

தமிழ்தேசியக் கூட்டமைப்பினருக்கும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான நேற்றைய சந்திப்பு கலந்துரையாடல் நோக்கிலானதாகவே அமைந்ததாக கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் சிறிலங்காவின் சனாதிபதித்தேர்தல் தொடர்பாக எந்த முடிவையும் தமிழ்தேசியக்கூட்டமைப்பு எடுக்கும் நோக்கிலானதாக நேற்றைய சந்திப்பு அமையவில்லை என நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின் பத்திரிகையாளர்களிடம் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இச்சந்திப்பின்போது மூன்று முக்கிய விடயங்களை எமக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெளிவுபடுத்தினார்

முதலாவது தமிழ் தேசிய இனத்தின் எழுச்சி அதாவது தமிழ் மக்களை எந்தளவிற்கு விடுதலைப் போராட்டத்திற்கு நாம் எடுத்துச் செல்லவேண்டும் என்பதையும் இரண்டாவது சர்வதேச சமூகத்தின் மத்தியில் எமது அழுத்தம் அதிகமாக இருக்க வேண்டும் எமது பிரச்சினைகள் சம்பந்தமாக சர்வதேச சமூகத்திற்கு முழுமையாக அறிவிக்க, வேண்டும் என்பது பற்றியும் மூன்றாவதாக சனாதிபதித் தேர்தல் பற்றி தற்போது ஒன்றும் இல்லை. நாம் அதைப்பற்றிப் பின்னர் சிந்திக்கலாம் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் குறிப்பிட்டிருந்தார் என்றார்.

இச்சந்திப்பின்' பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில் ;

மன்னாரில் எதிர்வரும் 28ஆம் நாள் தேசிய எழுச்சிப்பிரகடன நிகழ்வு நடைபெறுகிறது இந்த விழா சிறிலங்காப் படையினரின் கடுமையான நெருக்குவாரங்களுக்கு மத்தியிலேதான் நடைபெறவுள்ளது. இதை முறியடித்து வெற்றிகரமாக எழுச்சி நிகழ்வு நடாத்தப்படும். இங்கு நான் வரும்போது கூட சிறிலங்காப் படையினர் என்னைத் தடுத்து நிறுத்தினார்கள். மன்னார் மாவட்டத்தில் அங்குள்ள பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் அடையாள அட்டை இல்லாதவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

மன்னாரில் பாதுகாப்புப்படை மற்றும் பொலிசார் நடவடிக்கைகள் முன்னெப்போதையும்விட மோசமாக உள்ளது.

இதன்விளைவாக ஒருநாள் இரவோடு இரவாக 17 பெண்கள் கைது செய்யப்பட்டனர். எங்கள் தலையீட்டுக்குப் பிறகு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்தத் தகவல்கள் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் குறித்து நேற்றைய சந்திப்பில் விவாதித்தோம்.

சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் இன்னும் முடிவாகவில்லை. ஏனெனில் சந்திரிகா நாடு திரும்பிய உடன் சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிடவுள்ளார்.

அந்த அறிக்கையை மகிந்த ஏற்காவிட்டால் வேறு ஒருவர் போட்டியிடக்கூடும் என்று கூறப்படுகிறது.

இந்தத் தேர்தல் தொடர்பாக இறுதி முடிவெடுக்க இன்னும் நாட்கள் இருக்கின்றன.

இது தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

அந்தச் சந்திப்புக்குப் பிறகு தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுமா? யாரை ஆதரிக்கும் என்பது தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கப்படும். அடுத்த சந்திப்புக்கான திகதி முடிவு செய்யப்படவில்லை.

ஜே.வி.பி. ஜாதிகஹெல உறுமயவுடன் மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தம் செய்துள்ளதன் மூலம் தமிழ் மக்கள் மீதான போருக்கான அறைகூவலை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இது குறித்து எங்கள் கருத்தைத் தெரிவிப்போம். பலதளபதிகள், போராளிகள், பொதுமக்களை இழந்த போதும் தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுமை காத்து வருகின்றனர்.

மகிந்த போன்றவர்கள் ஆட்சிக்கு வரும்போது ஒரு கொடி ஒரு தலைவன் என்ற கோட்பாட்டின் கீழ் தமிழர்கள் அணிதிரண்டு முன்னரைப் போல் நாட்கள் நீடிக்காமல் ஒரு இறுதித் தீர்வாக ஈழதேசத்தை அடைய முடியும் என்றார்.

### வரலாறு...

கம்மா துணைப்படை மாவீரர் மயில் குஞ்சனின் துணைவியாரான வசந்தாதேவி எல்லைப்படைமாவீரர் மதியாபரணத்தின் துணைவியார் வானதி ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை இந்திய ஆக்கிரமிப்பு படையுடனான மோதலில் வீரச்சாவைத்தழுவிய வன்னிப்பிராந்திய அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த மேஜர் மாறனின் தந்தையார் செல்லத்துரை சின்னத்துரை ஏற்றிவைத்தார். எழுச்சிச் சுடர்களை முல்லை. வலய கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம் ஏற்ற, தொடர்ந்து சமநேரத்தில் 16 எழுச்சிச் சுடர்களும் ஏற்றப்பட்டன தொடர்ந்து கிருஸ்ணபிள்ளையின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் முல்லை. மக்களின் எழுச்சிப் பிரகடனத்தினை வருகை தந்திருந்த பெரும்திரளான மக்கள் அனைவரும் தமது கைகளை உயர்த்தி உரத்த குரலில் ஒலித்தனர்.

இப் பிரகடனச் செய்தி தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கையளிக்கப்பட்டது.

பேரெழுச்சியுடன் நடைபெற்ற இப் பிரகடன நிகழ்வில் மக்களுடன் சர்வ மதங்களின் குருமார், மக்கள் அமைப்புகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். கருத்துரைகளை.முல்லை. மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், முல்லைத்தீவு அரச அதிபர் மற்றும் ஏனைய மாவட்டங்களின் பிரதிநிதிகள், மதகுருமார், தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களான ச.கனகரத்தினம், [illegible]ரியநேத்திரன், ஈழவேந்தன், சி[illegible]நன்கிசோர் ஆகியோரும் சிறப்[illegible]ய திருகோணமலை மாவட்[illegible] அரசியல்துறை பொறுப்பாள[illegible]லனும் நிகழ்த்தினர்.

(05,08,20,ஆ.19,24,ச,தீ)


### ராசிக்...

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பது பாதுகாப்புத் தரப்பினரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து படையினர் சில நிமிடங்கள் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர். பின்னர் அந்தப் பகுதியில் வீதிகள் மூடப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்து 1990 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட பின் அவரது இல்லத்திலேயே ராசிக் குழுவின் முகாம் அமைந்துள்ளது. நகரின் வாவிக்கு அண்மையில் அமைந்துள்ள இந்த முகாம் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி முகாம்கள் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவின் ஸ்தாபகரான ராசிக் நான்கு வருடங்களுக்கு முன்பு மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து காந்தி அதன் பொறுப்பாளராக கடமை ஏற்றார். இவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியுடன் தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(32)




## சிறிலங்கா பொலிஸ் தலைமையகத்தில் நேற்று பாரிய தீ விபத்து!

### - ஆவணங்கள் எரிந்து நாசம்

கொழும்பிலுள்ள சிறிலங்காப் பொலிஸ் தலைமைச் செயலகத்தில் நேற்றுக் காலை பாரிய தீ விபத்து ஒன்று நடைபெற்றுள்ளது. இதனால் தலைமையகத்தின் மூன்றாம் மாடியில் இருந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் எண்மரின் அலுவலகங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தத் தீ விபத்துக்கு மின் ஒழுக்கே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துறைமுகத்திற்கு அண்மையில் உள்ள இந்த அலுவலகத்தின் மூன்றாவது மாடியில் துணைப் பொலிஸ்மா அதிபர் பாலசூரியவின் அலுவலகத்தில் ஏற்பட்ட தீயினால் கட்டடத்தின் உள்ளிருந்து பெரும் புகை வெளியேறியது. இந்தக் கட்டடத்திலேயே பொலிஸ்மா அதிபர், துணைப் பொலிஸ்மா அதிபர்களின் அலுவலகம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பத்திற்கும் மேற்பட்ட தீயணைக்கும் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டு அனைத்து வளங்களும் பயன்படுத்தப்பட்டு தீயணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதனால் தீ முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பட்டதாரிகள் போராட்டத்தால் யாழ்.செயலகம் ஸ்தம்பிதம்

வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் மற்றும் பதவிகளிற்கான ஆட்சேர்ப்பில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசடிகளைக் கண்டித்து குடாநாட்டில் தொடர்ச்சியாக கடந்த மூன்று தினங்களாக கல்வித்திணைக்கள அலுவலகத்தை மூடி மேற்கொள்ளப்பட்டு வரும் மறியல் போராட்டத்தின் மற்றொரு அங்கமாக யாழ். செயலகமும் மறியலால் நேற்று மதியம் வரை மூடப்பட்டது.காலை வேளை அங்கு குவிந்த சுமார் 500 இற்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் செயலகத்தின் பிரதான வாயில்களை மூடி மறியலில் ஈடுபட்டனர். இதனால் அரச அதிபரோ பணியாளர்களோ உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. எனினும் நண்பகலுடன் தமது மறியல் போராட்டத்தை விலக்கிக் கொண்ட அவர்கள் குறித்த மறியல் போராட்டமோர் அடையாள போராட்டமெனவும் தமக்கான உரிய தீர்வு கிடைக்கப்பெறாத விடத்து யாழ். செயலகத்தின் பணிகளை தொடர்ந்து முடக்கும் வகையிலான மறியல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

### அரசசார்பற்ற..

திருகோணமலை மாவட்ட துணை அரசியல்துறைப்பொறுப்பாளர் செம்மணனும் இச்சந்திப்பில் பங்கேற்றார்.மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து உள்ளூர், வெளியூர் அரசசார்பற்ற நிறுவனங்களைச்சார்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.தற்போதும் இனிவரும் நாட்களிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங்களை துரிதமாகச் செயற்படுத்துவது உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டன.

**மருதனார்...**என்பவரே துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியவராகும். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் சுடப்பட்ட இடத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் மருதனார்மடம் இராணுவ முகாம் அமைந்துள்ளமையும் குறிப்பிடக் கூடியதாகும். இராணுவத்தினர் குறிப்பிட்ட இடத்திற்கு சமுகம் கொடுத்ததுடன் சுன்னாகம் பொலிசார் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சகிதம் குறிப்பிட்ட இடத்திற்கு சமுகம் கொடுத்தனர்.

சடலத்தைப் பார்வையிட்ட நீதிபதி மரணவிசாரணைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்கும் படி கட்டளையிட்டுள்ளார். உந்துருளியில் வந்த இருவர் இவரைச் சுட்டுவிட்டு சென்றதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். குறிப்பிட்ட சம்பவம் இடம் பெற்ற இடம் மிகவும் சனநெரிசல் மிக்க இடம் என்பது குறிப்பிடக் கூடியதாகும். நேற்றுமுன்தினம் இப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதும் இது குறிப்பிட்ட இடத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தினுள்ளேயே உள்ளதும் குறிப்பிடக்கூடியதாகும்.

(41, 27,33)

இங்லிஷ் வேர்க்ஷொப்
அஞ்சடி வான்
புதிய பிரிவுகள்
தொழில் புரிவோருக்கு இரவில்
புதுமுக மாணவருக்குப் பகலில்
அடுத்த வாரமளவில் தொடங்கும்
பதிவுகள் 18.09.2005 காலை 9 மணிக்குச் செய்யப்படும்
(6712)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.